இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 135 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 9 – திங்கள்கிழமை 25 டிசம்பர் 2023 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 135 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 9 - Monday 25 December 2023 - Madurai 10 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (24.12.2023), தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, அண்ணா சாலை, சிம்சன் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

### அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்து அன்பு காட்டிடும் இந்த அரசின் சார்பில்

# கிறிஸ்துவ மக்களுக்கு என் உளமார்ந்த கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 25-**

**கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்து அன்பு காட்டிடும் இந்த அரசின் சார்பில் கிறிஸ்துவ சமுதாய மக்கள் அனைவருக்கும் தன் உளமார்ந்த கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

“கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தவை.”

“நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதை உடனே செய். அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும்போதே செய்.”

என்பன போன்ற தனி மனிதரின் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி நல்வாழ்வுக்கு வழிகாட்டும் போதனைகளை வழங்கிய புனிதர் இயேசுநாதர்! அவர் பிறந்த திருநாள் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 25 அன்று உலகமெங்கும் கிறிஸ்துமஸ் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.



கிறித்தவ சமயத்தைப் பரப்பிடத் தமிழ்நாடு வந்த தொண்டர்கள் பலர். அவர்களுள் தமிழ்மொழி மீது கொண்ட பற்றால், “தமிழ் மாணவன்” என்று தம் கல்லறையில் எழுதச் செய்த அறிஞர் ஜி.யு.போப், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் படைத்து, தமிழ் செம்மொழி எனப் பறைசாற்றிய அறிஞர் கால்டுவெல், சதுர் அகராதி தந்து, “தமிழ் அகராதியின் தந்தை” எனப் போற்றப்படும் வீரமாமுனிவர், தமிழ்நாட்டிற்கு அச்சு இயந்திரத்தை முதன்முதல் கொண்டுவந்து தமிழ்நூல்கள் அனைத்தும் அச்சு வடிவம் கொள்ளத் துணைபுரிந்த சீகன் பால்கு ஐயர் முதலான சான்றோர்கள் பலர் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள தொண்டுகள் வியக்கத் தக்கவை. இதில் பல பெருமக்களுக்கெல்லாம் நன்றியுணர்வோடு, சிலைகள் நிறுவி மண்ணில் அவர்கள் புகழ் என்றும் நின்று நிலவச் செய்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

மேலும், 2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல்,

* உபதேசியார் நல வாரியம்
* சிறுபான்மையினர் விடுதி மாணவ மாணவியர்க்கு சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு
* கரூர், மதுரை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒரு கிறிஸ்தவ உதவிச் சங்கம் கூடுதலாக துவங்கிட நிதி ஒதுக்கீடு
* ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் செல்வதற்கு அருட் சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்வு
* தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிகக் கடன்கள்

என நமது திராவிட மாடல் அரசின் சார்பில் கிறித்தவ மக்களுக்காக எண்ணற்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் மணிமகுடமாக, கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமெனச் சட்டப்பேரவையில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நான் தனித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளேன்.

அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்து அன்பு காட்டிடும் இந்த அரசின் சார்பில் கிறித்தவ சமுதாய மக்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு!

*கூடலூர், டிச. 25 -*

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகில் உள்ள வைகை அணை கடந்த மாதம் 10ந்தேதி 70 அடியை எட்டியது. இதனைதொடர்ந்து 11ந் தேதி முதல் 14ம் தேதி வரை சிவ கங்கை மாவட்ட பூர்வீக பாசனத் திற்கு 413 மி.கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதன்பின்னர் மீண்டும் வடகிழக்குபருவமழை தீவிரமடைந்ததால் வைகை அணையின் நீர்மட்டம் இந்த மாதம் முழு கொள்ளளவை எட்டியது.

இதனையடுத்து கடந்த 16ந்தேதி முதல் 20ந்தேதி வரை ராமநாதபுரம் மாவட்ட வைகை பூர்வீக பாசனபகுதி 3க்கும் 1004 மி.கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. வைகை அணையில் இருந்து ராமநாதபுரம் மாவட்ட மக்களின் வைகையாற்றின் வழியாக நேற்று காலை முதல் விநாடிக்கு 800 கனஅடிவீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

பின்னர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு 200 கன அடியாக திறக்கப்பட்டது. அணையிலிருக்கும் தண்ணீரை பொறுத்து கிருதுமால் நதிக்கு 10 நாட்கள் தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

வைகை அணையில் இருந்து 58ம் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தி உசிலம்பட்டி பகுதி விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நேற்று முதல் வைகை அணையில் இருந்து 58ம் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

### வரலாறு காணாத அதி கனமழை! அரசின் போர்க்கால நடவடிக்கையால்

# தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை திரும்பியது!

*தூத்துக்குடி, டிச. 25 -*

வரலாறு காணாத அதி கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசின் போர்க்கால நடவடிக்கையால் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17, 18 ஆகிய தேதிகளில் அதிகனமழை பெய்தது.

இதன் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. பல குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் புகுந்ததால், மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கு தேவையான உணவு, போர்வை உள்ளிட்ட உதவிகளை மாவட்ட நிர்வாகம் செய்தது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரசின் போர்க்கால நடவடிக்கைகளால், தூத்துக்குடி மாவட்டத்தில் மெல்ல மெல்ல இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது. கடந்த ஒரு வாரமாக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் களத்தில் இருந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிசெய்து வருகின்றனர்.

நிறுத்தப்பட்டிருந்த பேருந்து சேவை 2 நாட்களுக்கு முன் மீண்டும் தொடங்கியது. மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளுக்கு பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. திருச்செந்தூர் சாலை சீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று மாலையில் இருந்து திருச்செந்தூருக்கும் பேருந்து சேவை இயக்கப்பட்டது. தூத்துக்குடியின் முக்கிய சந்தையான வ.உ.சி சந்தையில் மக்களின் நடமாட்டம் மீண்டும் வழக்கமான நிலைக்கு திரும்பி உள்ளது.

**திருச்செந்தூர்!**

அதிகனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்ட திருச்செந்தூரிலும் அரசின் துரித நடவடிக்கையால் இயல்பு நிலை திரும்பியுள்ளது. 6 நாட்களுக்கு பிறகு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்து வருகின்றனர்.

### மல்யுத்த வீரர், வீராங்கனைகளின் கடும் எதிர்ப்புக்கு பணிந்த ஒன்றிய அரசு!

# இந்திய மல்யுத்த கூட்டமைப்பு சஸ்பெண்ட்!

## ஒன்றிய அரசு உத்தரவு!

*புதுடெல்லி, டிச. 25 -*

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் மீது முன்னணி மல்யுத்த வீராங்கனைகள் பலரும் கடுமையான பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், அவருக்கு நெருக்கமான சஞ்சய் சிங் , மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னணி மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக், மல்யுத்தத்தை விட்டே விலகுவதாக அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா, தனக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதை திருப்பிக்கொடுப்பதாக அறிவித்தார். சாக்ஷி மாலிக்கிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மல்யுத்த வீரர் விரேந்தர் சிங்கும் பத்மஸ்ரீ விருதை திரும்பக் கொடுப்பதாக அறிவித்துள்ளார். இந்நிலையில், இந்திய மல்யுத்த கூட்டமைப்பை ஒன்றிய விளையாட்டு அமைச்சகம் சஸ்பெண்ட் செய்துள்ளது.

இவ்வாண்டு இறுதியில் ஜூனியர் மல்யுத்தப் போட்டிகள் உத்தரப்பிரதேசத்தின் கோண்டா மாவட்டத்தில் நடைபெறும் என மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவர் சஞ்சய் சிங் அறிவித்திருந்தார். எந்த விதிமுறையையும் பின்பற்றாமல், அவசரகதியில் இந்த அறிவிப்பு வெளியிட்டதால்தான் இந்த நடவடிக்கை என ஒன்றிய விளையாட்டு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

இருப்பினும், மல்யுத்த வீரர், வீராங்கனைகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்தே இந்திய மல்யுத்த கூட்டமைப்பை ஒன்றிய அரசு சஸ்பெண்ட் செய்துள்ளதாகவே தகவல்கள் வெளியாகி உள்ளன.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 25-12-2023

# எது அவமானம்?

**இந்திய நாட்டின் நாடாளுமன்றத்தில் இருந்து ஒரே நேரத்தில் 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்தது ஜனநாயகத்துக்கு அவமானம் இல்லையாம். மாநிலங்களவை சபாநாயகர் ஜெகதீப் தன்கரைப் போல மிமிக்ரி செய்துவிட்டார்களாம். ஏதோ இந்தியாவே அவமானப்பட்டதைப் போல பிரதமரும், குடியரசுத் தலைவரும் குசலம் விசாரிப்பதும், மக்களவை சபாநாயகரும் - மாநிலங்களவை சபாநாயகரும் சந்தித்துக் கொள்வதும் குணச்சித்திரக் காட்சிகளாக அமைந்திருக்கின்றன.**

நாடாளுமன்றத்துக்குள் புகைக் குண்டு வீசப்பட்டது. இது தொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதுவே விஷ வாயு குண்டாக இருந்திருந்தால் பல உறுப்பினர்களின் நிலைமை என்ன ஆகி இருக்கும் என்றே கணிக்க முடியாது. இது தொடர்பாக பிரதமரோ, உள்துறை அமைச்சரோ அவைக்கு வந்து பதில் அளிக்க வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகளின் ஒற்றைக் கோரிக்கை. அதைக் கூட ஆளும் பா.ஜ.க. ஏற்கவில்லை. புகைக் குண்டு வீசப்பட்ட நாடாளுமன்றத்துக்கு வரவில்லை பிரதமர். பதிலளிக்கவில்லை உள்துறை அமைச்சர்.

உள்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஜனநாயக உரிமை ஆகும். அதைக் கூட பயன்படுத்த மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவும், மாநிலங்களவை சபாநாயகர் ஜெகதீப் தன்கரும் அனுமதிக்கவில்லை. தொடர்ச்சியான முழக்கத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பினார்கள். எனவே, கொத்துக் கொத்தாக உறுப்பினர்களை இடை நீக்கம் செய்யத் தொடங்கினார்கள் பேரவைத் தலைவர்கள். 146 உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இப்படி இடை நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களில் சிலர் நாடாளுமன்றத்தின் நுழைவாயில் படியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதுவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமை ஆகும். அப்போது திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரான கல்யாண் பானர்ஜி, துணை ஜனாதிபதியும் மாநிலங்களவை சபாநாயகருமான தன்கரைப் போல மிமிக்ரி செய்தாராம். இது தன்கர் கவனத்துக்குச் சென்றது. அவர் மாநிலங்களவையில் தனது கண்டனத்தை தெரிவித்து இருக்கிறார்.

உடனே துணை ஜனாதிபதியை தொலைபேசியில் அழைத்து பேசினாராம் பிரதமர் நரேந்திரமோடி. “பிரதமர் மோடி என்னை போனில் அழைத்து பேசினார். மாண்புமிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் செய்த கேவலமான செயல்கள் குறித்து வேதனையை வெளிப்படுத்தினார். அதுவும் புனிதமான நாடாளுமன்ற வளாகத்தில் நடப்பது வருத்தம் அளிப்பதாகச் சொன்னார். 20 ஆண்டுகளாக தான் இது போன்ற அவமானங்களை அனுபவித்து வருவதாகவும் சொன்னார். துணை ஜனாதிபதிக்கே இப்படி நடக்கலாமா என்றும் சொன்னார்” என்று பதிவிட்டுள்ளார் துணை ஜனாதிபதி.

“மிமிக்ரி ஒன்றும் தடை செய்யப்பட்டதல்ல. இதன் மூலமாக உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை திசை திருப்பப் பார்க்கிறார்கள். துணை ஜனாதிபதி உள்பட யாரையும் கேலி செய்யும் எண்ணம் எனக்கு இல்லை” என்று சொல்லிவிட்டார் மிமிக்ரி செய்த எம்.பி. கல்யாண் பானர்ஜி. அதன் பிறகும் இதை பெரிது ஆக்கினார்கள்.

புகைக் குண்டு வீசியவருக்கு நாடாளுமன்ற நுழைவு அனுமதிச் சீட்டு கொடுத்தவர் பா.ஜ.க. எம்.பி. அதனைத் திசை திருப்பவே இதைச் செய்கிறார்கள்.

**அதிலும் குறிப்பாக 20 ஆண்டுகளாக பிரதமர் நரேந்திரமோடி என்ன அவமானங்களைச் சந்தித்து வருகிறார்? குஜராத் படுகொலையைச் சொல்கிறாரா? அது யாருக்கு, யாரால் இழைக்கப்பட்ட அவமானம்? இந்திய நாட்டின் பன்முகத் தன்மைக்கும், மனித உரிமைகளுக்கும், மனசாட்சிக்கும் இழைக்கப்பட்ட துரோகத்துக்கு யார் காரணம்? பொறுப்பேற்க வேண்டியவர் யார்? அது என்ன அவதூறு குற்றச்சாட்டா? அது நடக்க யார் காரணம்? யாருடைய ஆட்சியில் நடந்தது? யார் கொடுத்த துணிச்சலில் நடந்தது? யார் இதுவரை தண்டிக்கப்பட்டுள்ளார்கள்? பொத்தாம் பொதுவாக, ‘20 ஆண்டுகளாக நான் அவமானங்களைச் சந்தித்து வருகிறேன்’ என்பதன் மூலமாக பிரதமர் நரேந்திர மோடி யாரிடம் கழிவிரக்கம் தேட விரும்புகிறார்?**

மக்களவையில் எழுந்து நின்று தன்கருக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்து இருக்கிறார்கள் பா.ஜ.க. எம்.பி.கள். இது அடுத்தடுத்து நடந்த நாடகங்கள் ஆகும்.

2018 ஆம் ஆண்டு நடந்ததை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜெயராம் ரமேஷ் வெளியிட்டுள்ளார். ராகுல் காந்தி சபையில் பேசிவிட்டு, பிரதமரின் இருக்கைக்குச் சென்று அவரைக் கட்டிப் பிடித்தார். அதன்பிறகு பேசிய பிரதமர் அவர்கள், ராகுல்காந்தியைப் போல மிமிக்ரி செய்ததை சுட்டிக் காட்டி இருந்தார். ‘யார் யாரை கிண்டல் செய்து நடித்துக் காண்பிக்கின்றனர். அதுவும் மக்களவைக்குள் நடித்துக் காட்டியதை நினைவுகூறுங்கள்’ என்று சொல்லி அந்த வீடியோவை வெளியிட்டுள்ளார் ஜெயராம் ரமேஷ். முன்னாள் துணைக் குடியரசுத் தலைவர் ஹமீது அன்சாரியை, பிரதமர் மோடி மிமிக்ரி செய்யும் வீடியோவையும் ஜெயராம் ரமேஷ் வெளியிட்டு இருக்கிறார்.

**ராகுல்காந்தியை ‘பப்பு’ என்று சொல்லி அதை சைகை மூலம் மிமிக்ரி செய்து கிண்டலடித்தார் பிரதமர் நரேந்திரமோடி. அதனை காங்கிரஸ் கட்சி வெளியிட்டு விமர்சித்துள்ளது. “பிரதமர் மோடி கூட எதிர்க்கட்சித் தலைவர்களை மிமிக்ரி செய்துள்ளார். அவர் அவ்வாறு செய்வதை எல்லோரும் சீரியஸாக எடுக்காமல் நகைச்சுவையாகவே எடுத்துக் கொண்டனர். இப்போது என் விஷயத்தில் சீரியஸாக எடுத்துக் கொண்டால் நான் பொறுப்பல்ல” என்றும் கல்யாண் பானர்ஜி சொல்லி இருக்கிறார்.**

**இந்திய நாட்டின் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து புகைக் குண்டு வீசப்பட்டது கேவலமில்லையா? இந்திய நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்பது அவமான மில்லையா? ஒட்டுமொத்தமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இழைக்கப்பட்ட உரிமை மீறல் அல்லவா இது? பா.ஜ.க. உறுப்பினர்களுக்கும் சேர்த்தே தான் பா.ஜ.க. நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு இல்லையா? இதைக் கேள்வி கேட்டால், அனைவரையும் டிஸ்மிஸ் செய்து விடுவோம் என்பது தான் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு கடைப்பிடிக்கும் நெறிமுறையா? அனைத்து உறுப்பினர்களின் பாதுகாப்பும், ஒரே ஒரு உறுப்பினரின் மிமிக்ரியும் ஒன்றா?**

●●



நெல்லை மாவட்டம், தருவை பாலக்கால் கால்வாய் உடைப்பினால் சேதமடைந்த விவசாய நிலங்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா, நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், வேளாண்மை ஆணையர் முனைவர் சுப்பிரமணியன், தோட்டக்கலை இயக்குனர் பிருந்தாதேவி ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், நகரச் செயலாளர் கணேசன் உள்பட அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### தென் மாவட்ட மக்களை மீட்டெடுப்பதில்

# தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் செயல்படுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, டிச. 25 -**

**கன மழையால் பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களை மீட்டெடுக்கும் பணிகளை தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-**

பெருமழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்ட மக்களின் உடல்நலனை உறுதிசெய்திட மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் 2,500க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல் உழவர்களின் வாழ்வாதாரங்களை மீட்டெடுத்து அவர்களது நலன் காத்திட வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் களப்பணியில் ஈடுபட்டுள்ளார்.

அதோடு 6 நாட்களாக 10 பொறுப்பு அமைச்சர்களும், நாடாளுமன்ற/ சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் களத்தில் இருந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிசெய்து வருகின்றனர்.

தலைமைச் செயலாளர் அவர்களும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தங்கியிருந்து அரசு அதிகாரிகளுடன் இணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து வருகிறார். தென் மாவட்ட மக்களை மீட்டெடுப்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நிவாரணப் பொருள்கள் வழங்கிய

# கேரள உடன்பிறப்புகளின் அன்புக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 25 -**

**தமிழ்நாட்டுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கிய கேரள உடன்பிறப்புகளுக்கு நன்றி தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

கனமழையால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கிய கேரள உடன்பிறப்புகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு :

கனமழையால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களுக்கு கேரள மாநில சகோதர, சகோதரிகள் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்ததற்காக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கேரள உடன்பிறப்புகளின் அன்புக்கு நன்றி” என்று தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டு நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

### முல்லைப் பெரியாறு அணை

## 141 அடியை எட்டியது!

தேனி, டிச. 25–

141 அடியை எட்டிய முல்லைப் பெரியாறு அணை. 2ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கேரளா பகுதிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று 7 மணி நிலவரப்படி 141 அடியை முல்லைப் பெரியாறு அணை எட்டியது. இதனால், கேரளா பகுதிக்கு 2ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### நெல்லை - நாங்குநேரி - களக்காடு பகுதிகளில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புப் பணி!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டு ஆய்வு!

நெல்லை, டிச.25-

நெல்லை மாவட்டம் நாங்குநேரி மற்றும் களக்காடு பகுதியில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகள் மற்றும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெல்லை மாவட்டத்தில் பெய்துள்ள கனமழையினால் பல்வேறு இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள இடங்களை கண்காணிப்பதற்கு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணிப்பு அலுவலர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று கண்காணித்து வருகிறார்கள். ஒவ்வொரு துறைகள் மூலம் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

நெல்லை நாங்குநேரி மறுகால்குறிச்சி ஊராட்சி வில்வராயன் குளத்தில் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்பினை தற்காலிகமாக சரி செய்யப்பட்டுள்ளதை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். தொடர்ந்து பெரிய குளம் தண்ணீர் நிரம்பி கரையோரமாக தண்ணீர் வெளியேறியது. இதனை தற்காலிகமாக மண்நிரப்பி சீர் செய்துள்ளது. நிரந்தரமாக அடைப்பதற்கு துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. கீழப்புத்தனேரி செல்லும் சாலை அதிகமாக மழை வெள்ளம் ஏற்பட்டதால் அரிப்பு ஏற்பட்டு துண்டிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பாலத்தை பொதுமக்களின் போக்குவரத்திற்காக தற்சமயம் தற்காலிகமாக பாலம் அமைத்து கொடுக்க வேண்டும். மேலும் வரும் காலங்களில் மழை தண்ணீர் வந்தாலும் தடையின்றி செல்லும் வகையில் ஆய்வு செய்து சாலை அமைக்க வேண்டும் என்றார். பாரங்காடு பகுதியில் வீடு மழையில் இடிந்துள்ளது. இந்த வீட்டினை பார்வையிட்டு கணக்கெடுப்பு செய்யப்பட்டு உரிய நிவாரண வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார். கோதைச்சேரியில் மழை வெள்ளத்தினால் 5000 வாழைப் பயிர்கள் சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளதையும், ஏர்வாடி பகுதியில் உள்ள வாய்க்கால் மற்றும் ஏர்வாடி வணிகர்கள் தெருவில் பிரிக்குளம் தரை உடைந்து வீடுகளில் தண்ணீர் சென்றுள்ளதை பார்வையிட்டு, தண்ணீர் வடிவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

நெல்லை மாவட்டத்தில் பெய்துள்ள கனமழை காரணமாக பல்வேறு பகுதிகள் பாதிப்படைந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் விவசாயம் முழுமையாக பாதிப்படைந்துள்ளது. நாங்குநேரிக்கு உட்பட்ட பகுதியில் ஆய்வு செய்த போது மழை வெள்ளத்தினால் குளங்கள் சேதம் அடைந்து தண்ணீர் வெளியேறி சாலை பழுதடைந்துள்ளது. போக்குவரத்து துண்டிக்கப் பட்டுள்ளது. மழை வெள்ளத்தினால் வாழைப்பயிர்கள் மற்றும் நெற்பயிர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. தனிநபர் வீடுகளும் சேதம் அடைந்துள்ளன. இப்பகுதியில் சேதம் அடைந்துள்ளவை கணக்கெடுப்பு உரிய நிவாரணம் தமிழ்நாடு அரசு மூலம் பெற்று தருவதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கணக்கெடுக்கும் பணிகள் துரிதமாக நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

தொடர்ந்து நம்பியாற்று பாலம், கௌதமநதி, தம்பி தோப்பு, குடில் தெருவில் மழை வெள்ளத்தினால் பாலம் உடைந்த இடம், பத்தமனேரி உப்பாத்து பாலம், சிங்கிகுளம் ஆகிய இடங்களை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், ஒன்றியச் செயலாளர்கள் சுடலைக்கண்ணு, செல்வக கருணாநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, களக்காடு நகர் மன்றத் தலைவர் சாந்தி சுபாஷ், துணைத் தலைவர் ராஜன், ஏர்வாடி பேரூராட்சி தலைவர் தசிலிமா அயூப்கான் வட்டாட்சியர் விஜய் ஆனந்த், செயல் அலுவலர் சாஜன்மேதிக் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம், நாங்குநேரி, காரங்காடு பகுதியில் மழை வெள்ளத்தினால் வீடு இடிந்துள்ளதை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல், ஒன்றியச் செயலாளர் சுடலைக்கண்ணு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட அரசு அலுவலர்கள், கழகத்தினர் பலர் உள்ளனர்.


### வீறுகொண்டு எழுந்த நாம் ஒருபோதும் வீழ மாட்டோம் என

# தந்தை பெரியார் நினைவு நாளில் சூளுரைத்து வீணர்களை வீழ்த்துவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 25-**

**தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**



பண்பாட்டு ரீதியாக ஒடுக்கப்பட்டு, அடையாளங்கள் சிதைக்கப்பட்ட தமிழினத்தின் சுயமரியாதையைத் தட்டியெழுப்பி, சமத்துவ நெறியே தமிழர் நெறி எனப் பகுத்தறிவுப் பாதையில் நம்மையெல்லாம் நடைபோடச் செய்த தந்தை பெரியாரின் புகழைப் போற்றுவோம்!

“கணந்தோறும் இப்பெரிய தமிழ்நாடு எதிர்பார்க்கும் தலைவர் பெரியார்” என்று பாவேந்தர் பாடியதைக் காலந்தோறும் முழங்குவோம்! வீறுகொண்டு எழுந்த நாம் ஒருபோதும் வீழ மாட்டோம் எனச் சூளுரைத்து வீணர்களை வீழ்த்துவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (23.12.2023) தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் ஒன்றியம், ஏரல் பேரூராட்சி பகுதியில் குரும்பல் என்னும் இடத்தில், திருச்செந்தூர், பாளையம்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள மேம்பாலம் கனமழையினால் அடித்துச் செல்லபட்டதையொட்டி, தற்போது அணுகுசாலை போர்க்கால அடிப்படையில், அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், மற்றும் பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத் ஆகியோர் உள்ளனர்.

## தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞரின் கனவு நிறைவேறவே, மகளிர் சுய உதவிக் குழுக்கள்!

# நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30 ஆயிரம் கோடி கடனுதவி !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, டிச. 25 -**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கனவினை நிறைவேற்றவே மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன என்றும் நடப்பாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.30 ஆயிரம் கோடி கடனுதவி வழங்கப்படும் எனவும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,472 பேருக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பில், சென்னை காஞ்சிபுரம் திருவள்ளூர் செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 1,827 நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 23,472 சகோதரிகளுக்கு ரூ.125.50 கோடி மதிப்பிலான வங்கி கடன் இணைப்பு வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடன் இணைப்பு வழங்கி வாழ்த்திப்பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது :

“பொருளாதாரச் சுதந்திரமே உண்மையான பெண் விடுதலைக்கு அடித்தளம். இதனை உணர்ந்து, எப்போதெல்லாம் கழக ஆட்சி அமைகின்றதோ அப்பொழுதெல்லாம், நம்முடைய திராவிட மாடல் அரசு மகளிர் மேம்பாட்டுக்கான திட்டங்களைத் தொடர்ந்து தந்து வருகின்றது.

வீட்டுக்குள் முடங்கி இருந்த பெண்களை வகுப்பறைக்குக் கொண்டு வந்தது திராவிட இயக்கம்.

100 ஆண்டுகளுக்கு முன்பு பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது. அந்த வாக்குரிமையைப் பெற்றுத் தந்தது, நமது திராவிட இயக்கத்தின் தொடக்கப் புள்ளியான நீதிக் கட்சி. பெண் விடுதலையைப் பெண்களிடத்தில் இருந்து யோசித்தவர்கள் என்றால், அது நம்முடைய தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

**பெண்களுக்காக போராடியவர் பெரியார்!**

அதனால்தான் பெரியார் அவர்கள் பெண்களுக்குக் கலாசாரம் என்ற பெயரிலும், சமூகம் என்ற பெயரிலும், சட்டம் என்ற பெயரிலும் இருந்த தடைகள் என்ன, என்று விவரித்துச் சொன்னார்கள். அந்த மூன்று தடைகளும் உடைபட வேண்டும் என்றால், பெண்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற வேண்டும் என்று போராடியவர்தான் தந்தை பெரியார். அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதன்முறையாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த போதுதான் `ஆணுக்குப் பெண் சரிசமம் நிகர்’ என்பதை உணர்த்த சுய மரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கினார்.

அவர்கள் நாட்டிலேயே முதன் முறையாகப் பெண்களுக்குச் சொத்திலே சம உரிமை என்று அறிவித்து, அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல கட்டணமில்லா கல்வி, உள்ளாட்சியில் இட ஒதுக்கீடு என மகளிருக்குக் கலைஞர் தந்த திட்டங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு நாடே போற்றுகின்ற வகையில், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் செயல்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 லட்சம் மகளிர், மாதம் 1,000 ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பெற்று வருகின்றார்கள்.

**தமிழ்நாட்டு முதல்வரை பின்பற்றும் மாநிலங்கள்!**

இந்தியாவிலே முதன்முறையாக தேர்தல் அறிக்கைகளில் சொன்ன வாக்குறுதி மகளிருக்குக் கட்டணம் இல்லாப் பேருந்து வசதி திட்டத்தை அறிவித்தவரும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். இப்போது அந்தத் திட்டத்தைப் பல மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. பெண் கல்விக்கு, புதுமைப்பெண் திட்டம் வாயிலாக, அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரிக்கு சென்று படித்தாலும் அவர்களின் வங்கிக் கணக்கில் கல்வி ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அதேபோல மகளிர்க்கு பெரிதும் உதவுகின்ற இன்னொரு திட்டம் ‘முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டம்’. முன்பெல்லாம் வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டுச் சோகமாக இருப்பார்கள். பிள்ளைகள் காலை 8 மணிக்கெல்லாம் கிளம்பி, பள்ளிக்குச் சென்று விட வேண்டும். பள்ளிக்கூடத்திற்குச் சென்ற பையன் சாப்பிட்டானோ பசியோடு இருப்பானே என்று பெற்றோர்கள் யோசித்துக் கொண்டே இருப்பார்கள்.

ஆனால், இப்பொழுது நம்முடைய அரசு ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இப்பொழுது அனைத்து பெற்றோர்களும், தைரியமாகவும் சந்தோஷமாகவும் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை 1989 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் தான் தொடங்கி வைத்தார்கள். அதனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பார்த்து பார்த்து வளர்த்தெடுத்து வருகின்றார்கள். அதற்கு உதாரணம், இந்த ஒரு நிகழ்ச்சியே போதும். தர்மபுரியில் அன்றைக்குப் போடப்பட்ட அந்த விதை, இன்று தமிழ்நாடு எங்கும் வளர்ந்து சுமார் ஐந்து லட்சம் மகளிர் குழுக்களாக இன்று வளர்ந்து நிற்கின்றது.

உங்களுக்குள்ளாகவே ஒரு சேமிப்பை மேற்கொண்டு அதன் மூலம் ஒரு நிதி ஆதாரத்தை உருவாக்கி, பிறகு கடன் உதவிகளைப் பெற்று பயனடைகின்ற வகையில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடனுதவி வழங்கி துணை நிற்பது என்பதற்கு இந்த அரசு ஒருபோதும் தயங்கியது கிடையாது.

**கடந்த ஆண்டு ரூ.28 ஆயிரம் கோடி கடன்!**

இன்றைக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாக மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்குக் கடன் இணைப்புகளை வழங்கி வருகின்றோம். கடந்த நிதி ஆண்டில் மட்டும் 28,000 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. இந்த வருடம் அதைத் தாண்டி இந்த நிதி ஆண்டில் 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி, கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



இன்று வரை 22 ஆயிரம் ரூபாய் அளவுக்கு கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முடிவதற்குள் மீதமுள்ள கடன் இணைப்பும் விரைவில் உங்களை வந்தடையும். அந்த இலக்கை நாங்கள் நிச்சயம் தொட்டு விடுவோம். மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கடனைப் பெற்று அதனைத் திருப்பிச் செலுத்துபவர்களாக மட்டும் இருக்கக் கூடாது. மகளிர் அந்தக் கடனுதவி மூலம் வாழ்வில் அடுத்த நிலைக்குச் செல்லவும், இந்த அரசு எப்பொழுதும் உங்களுக்குத் துணை நிற்கும்.

அதனால்தான் மகளிர் தொழில் முனைவோராக வரவேண்டும் என்று நாம் அனைவரும் உழைத்து வருகின்றோம். இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாம்பலம் பகுதி அளவிலான கூட்டமைப்பின் கீழ் அந்தப் பகுதியைச் சேர்ந்த 35 சுயஉதவி குழுக்களைச் சேர்ந்த 455 உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

இந்தக் கூட்டமைப்பு சிறு வங்கி போல செயல்பட ஏதுவாக ரூபாய் ஒரு கோடியே 48 லட்சம் ரூபாய் கடன் இணைப்பு இன்று வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் சென்னை பல்லாவரத்தைச் சேர்ந்த டாக்டர் அம்பேத்கர் மகளிர் சுயஉதவி குழுக்களின் சகோதரிகள் தனித்தனியாக துணி வியாபாரம், மளிகைக் கடை, மீன் வியாபாரம், மசாலாப் பொருட்கள் விற்பனை போன்ற தொழில்களைச் செய்து வருகின்றீர்கள். உங்களுக்கு இங்கே ரூபாய் 15 லட்சம் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது உங்கள் தொழில் சிறக்க உதவியாக இருக்கும். உங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள். ஆவடி மாநகராட்சி, திருமலை ராஜபுரம் பகுதியைச் சேர்ந்த சாலையோரம் வியாபாரம் செய்யும் 12 சகோதரிகளை ஒருங்கிணைத்து `அட்சயா மகளிர் சுய உதவிக் குழு’ தொடங்கப்பட்டது.

இந்தச் சகோதரிகள் தங்களுடைய வியாபாரத்திற்காக வெளியில் அதிக அளவில் வட்டிக்குக் கடன் வாங்கி வந்த நிலையில், நம்முடைய மையம் மூலம் முறையே ஐம்பதாயிரம் ரூபாய் முதல் 4 லட்சம் ரூபாய் வரை கடன் பெற்று தொழிலைப் பெருக்கிக் கொண்டு உள்ளீர்கள். இன்றைக்கு உங்களுக்கு 20 லட்சம் ரூபாய் கடன் இணைப்பாக வழங்கப்படுகின்றது.

இந்தத் தொகை உங்களுடைய தொழிலை மேலும் வலப்படுத்தும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு உள்ளது. இன்றைக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஏராளமான பொருட்களைத் தயார் செய்து வருகின்றீர்கள்.

**மகளிர் குழுக்களுக்கு விற்பனை அரங்கம்!**

நான் பல மாவட்டங்களுக்கு எந்த மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் செல்லும்போதும் ஆய்வுக்காக அங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் நீங்கள் அமைக்கின்ற அந்த அரங்குகளுக்கு வந்து, நீங்கள் தயார் செய்கின்ற இந்தப் பொருட்களை எல்லாம் தொடர்ந்து பார்வையிட்டு வருகின்றேன்.

அரசு நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல, எங்களுடைய கட்சி நிகழ்ச்சிகளிலும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கான அரங்குகளையும் நாங்கள் அமைத்துக் கொடுத்திருக்கின்றோம்.

சமீபத்தில், சட்டமன்றத்திலும் பேசினேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் நான் வேண்டுகோள் வைத்தேன். யார் பிறந்தநாளாக இருக்கட்டும். எந்த ஒரு நல்ல நாளாக விழா நிகழ்வாக இருக்கட்டும் பரிசுகள் கொடுக்கும்போது அவர்களுக்கெல்லாம் ஒரு வேண்டுகோள் வைத்தேன். அனைவருக்கும் பரிசுகள் கொடுக்கும்போது இந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயார் செய்கின்ற பொருட்கள் தரமான பொருட்களாக இருக்கின்றது. அவங்களுக்கு உதவுகின்ற வகையில், ஒவ்வொருத்தர் அந்தப் பொருட்களை வாங்கிப் பரிசு கொடுங்கள் என்று சட்டமன்றத்திலே பேசி இருந்தேன்.

சமீபத்தில், என்னுடைய பிறந்தநாள் விழாவில்கூட, `தயவுசெய்து மகளிர் குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களைப் பரிசாகக் கொடுங்கள்’ என்று வேண்டுகோள் வைத்தேன். இன்னும் சொல்லப்போனால், நான் தொடர்ந்து நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களைத்தான் உபயோகித்துக் கொண்டு வருகின்றேன்.

என்னுடைய வீட்டில் எங்குப் பார்த்தாலும், நீங்கள் தயாரிக்கின்ற அந்தப் பொருட்கள்தான். என்னுடைய வீட்டில் மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சரின் வீட்டிலும் எங்குப் பார்த்தாலும் நம்முடைய மகளிர் சுய உதவிக்குழுக்களாகிய நீங்கள் தயாரிக்கின்ற பொருட்கள்தான். சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். அதைத்தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றோம்.

நீங்கள் பொருட்களைத் தயாரிக்கின்ற போது அதை சந்தைப்படுத்துவதற்கும் நம்முடைய அரசு துணை நிற்கின்றது. கிராமப் பகுதிகளில் நீங்கள் தயாரிக்கும் பொருட்களை நகரங்களில் வந்து விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான்.

**பூமாலை வணிக வளாகங்கள்!**

சமீபத்தில் பூமாலை வணிக வளாகங்கள் எல்லாம் புனரமைக்கப்பட்டு, சீரமைக்க ப்பட்டு, அவை உங்களுடைய பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டன. அதையெல்லாம் நீங்கள் பயன்படுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தியாளர், சந்தையாளர் கூட்டத்தை, திருச்சியில் சில மாதங்களுக்கு முன்பு நடத்தி முடித்தோம். அந்தக் கூட்டம் உங்களுடைய பொருட்களைச் சந்தைப்படுத்த பெரிதும் உதவுகின்றது என்று நம்புகின்றோம்.

இணையத்தின் வாயிலாகவும் நீங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், `மதி சந்தை’ என்னும் இணையதளம், மதி சந்தை மொபைல் அப்ளிகேஷன் போன்றவற்றையும் நாங்கள் தொடங்கி வைத்துள்ளோம். எனவே, இந்த அரசு உங்களின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் துணை நிற்கும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த நீங்கள், ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற்றம் அடைய உங்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து தர இந்த அரசு தயாராக இருக்கின்றது.

நான் அடிக்கடி சொல்வது போல, நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இந்த அரசும் உங்களுக்கான இந்தக் கடன் உதவியை வெறும் கடன் தொகையாகப் பார்ப்பதில்லை. அதற்கு மாறாக, உங்களுடைய உழைப்பின் மீது வைத்துள்ள நம்பிக்கை தொகையாகத்தான் பார்க்கின்றது, என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இங்கு கடனுதவி பெற்றுள்ள உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திவ்யதர்ஷினி, நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் ஸ்ரேயா பி.சிங் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரியில் தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டு குடிநீர் திட்டத்திற்கு தண்ணீர் எடுத்து செல்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உறை கிணறுகள் மற்றும் குடிநீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் மழை வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளதையும், மேற்கொண்டு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நேற்று (24.12.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், கூடுதல் தலைமைச் செயலாளர் – வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்– தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச்செயலாளர் மரு.இரா.செல்வராஜ், குடிநீர் வழங்கல் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் வே.சரவணன், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், உட்பட அரசு அலுவலர்கள் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல், இராசிபுரம் நகராட்சி மற்றும் காளப்பநாய்க்கன்பட்டி பேரூர் ஆகிய வார்டு பகுதிகளில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். இம்முகாமில் ஒன்றியச் செயலாளர் அசோக்குமார், நகரச் செயலாளர்கள் என்.ஆர்.சங்கர், ராணா ஆனந்த், சிவக்குமார், செ.பூபதி, நாமக்கல் நகர்மன்றத் தலைவர்கள் து.கலாநிதி, கவிதா சங்கர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன் வட்டாட்சியர் சக்திவேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை சந்திப்பு பகுதியில் அமைந்துள்ள லெட்சுமி நாராயணன் மஹாலில் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் ஏற்பாட்டில் 2000 குடும்பங்களுக்கு 15 பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்புகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழங்கினார். உடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர் சாலமோன் டேவிட்,கனகராஜ், அருண்தவசுபாண்டியன், சத்தியவாணிமுத்து, துணை மேயர் ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில்

# திருநெல்வேலி மாவட்ட மருத்துவக் கல்லூரி - மருத்துவமனையில் ஆய்வு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மேற்கொண்டார்!

சென்னை, டிச.25-

திருநெல்வேலி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையினை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்தார்.

திருநெல்வேலி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனை, பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவமனை மற்றும் பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும் மருத்துவ முகாம்களை தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர், ககன் தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவ கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் நேற்று (23.12.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 அன்று பெய்த கனமழையினால் அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் தண்ணீர் வந்துள்ள இடங்களில் மீண்டும் தண்ணீர் உட்புகாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும், சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு, நோயாளிகளை பரிசோதனை செய்யப்படும் ஸ்கேன் மற்றும் அதி தீவிர சிகிச்சை பிரிவு உள்ளிட்டவைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பார்வையிட்டு, ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பெய்த கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் தொடர்ச்சியாக ஒரு வார காலமாக மேற்கொள்ளப்பட்டு, பல இடங்களில் இயல்பு நிலை திரும்பப்பட்டுள்ளது. குறிப்பாக தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இயல்பு நிலை திரும்பப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் படிப்படியாக மக்கள் இயல்பு நிலைக்கு மாறி உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இன்னும் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை குறித்தும், பொதுமக்களின் நலன்கருதி ஏற்பட்டுள்ள மருத்துவ முகாம்கள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் தூத்துக்குடி மாநகராட்சி மூன்றாவது மைல், ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையம், கீதா பள்ளி, குறிஞ்சி நகர் ஆகியவற்றையும், ஊரகப்பகுதிகளான கூட்டாங்குழி, சுப்பிரமணியபுரம், நட்டாத்தி, மங்கலக்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, ஏரல் காயல்பட்டிணம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள மருத்துவமனைகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு மருத்துவ முகாமிலும் 100க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். 17.12.2023 முதல் 23.12.2023 வரை 2,682 மொத்த முகாம்கள வாயிலாக 95,124 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இதில் 864 பேர் காய்ச்சல், 2,565 பேர் சளி, இருமல் சிகிச்சை பெற்றுள்ளனர்.

**நடமாடும் மருத்துவ வாகனங்கள்!**

தொடர்ந்து, முதலமைச்சர் மருத்துவ முகாம்களை நீடித்திட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், நடமாடும் மருத்துவ வாகனங்களாக தூத்துக்குடியில் 93 வாகனங்கள், திருநெல்வேலியில் 31 வாகனங்கள், கன்னியாகுமரி 36 வாகனங்கள், தென்காசியில் 30 வாகனங்கள் என மொத்தம் 190 நடமாடும் மருத்துவ வாகனங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

தொடர்ந்து, இன்று (24.12.2023) மழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, காயல்பட்டிணம், திருச்செந்தூர், கருங்குளம், உடன்குடி, சாத்தான்குளம் உள்ளிட்ட 50 இடங்களில் தனியார் மருத்துவமனைகளான வேலம்மாள் மருத்துவமனை, வடமலையான், மீனாட்சி மிஷன், அரிஸ்டோ, ஆசீர்வாதா, பாலா, தேவதாஸ் உள்ளிட்ட சுமார் 14 மருத்துமனைகளை ஒருங்கிணைத்து மெகா அளவிலான மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் சரிசெய்யப்பட்டுள்ளது. நான்கு மாவட்டங்களை பொறுத்தவரையில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்கள்,261துணை சுகாதார நிலையங்கள் பாதிக்கப்பட்டது. மேலும், 315 மருத்துவ கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை சீரமைப்பதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்து பொதுப்பணித்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாளையங்கோட்டை மனக்காவலன் பிள்ளை நகரில் நடைபெற்ற மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கினார்.

மேலும், பாளையங்கோட்டை சித்தா மருத்துவக்கல்லூரியில் சிகிச்சை பிரிவுகள் மற்றும் புற நோயாளிகள் பிரிவினையும்,தெற்கு வள்ளியூர் ஊராட்சி நடைபெற்று வரும் மருத்துவ முகாமினையும், களக்காடு அரசு மருத்துவமனையில் மழைநீர் தேங்கி, தற்போது மறு சீரமைக்கப்பட்டதை பார்வையிட்டு, மருத்துவமனையிலுள்ள சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சேரன்மகாதேவி மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை முறைகள் குறித்து பார்வையிட்டு, கேட்டறிந்தார்.

நடைபெற்ற ஆய்வில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனை முதல்வர் மரு.ரேவதி, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.லதா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.ராஜேந்திரன் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், களக்காடு நகர்மன்ற தலைவர் திருமதி.சாந்தி சுபாஷ், பணக்குடி பேரூராட்சி தலைவர் திருமதி.தனலெட்சுமி,களக்காடு நகராட்சி துணைத்தலைவர் பி.சி.ராஜன், வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சேவியர் செல்வ ராஜா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், தெற்கு வள்ளியூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. முத்தரசி ரகு பால் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஈரோடு செ. அரங்கராசன்**

**டிசம்பர் 25 (2002)**



ஈரோடு நகரக் கழகச் செயலாளராக மூன்று முறை சிறப்பாகப் பணியாற்றினார்.

ஈரோடு நகர்மன்ற உறுப்பினராக இருமுறையும், பின்னர் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நகர்மன்றத் தலைவராகவும் இருந்தபோது நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் கிடைத்திட ஏற்பாடு செய்தார்.

விலைவாசி; இந்தி எதிர்ப்பு; இலங்கை தமிழர் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### திராவிட மாடல் ஆட்சியில்


# அனைத்து நலத்திட்டங்களும் மக்களைத் தேடி செல்கிறது!

## அமைச்சர் ஐ. பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், டிச.25-

திராவிடமாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மக்களைத்தேடி அனைத்து நலத்திட்டங்கள் வருகிறது என்று கன்னிவாடியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். கோரிக்கை மனு கொடுத்தவர்களுக்கு மின்சாரத்துறை மற்றும் வருவாய்த்துறை சார்பாக உடனடியாக தீர்வு வழங்கியதால் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி விவசாயிகள், பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

கன்னிவாடி பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் முகாம் சமுதாயநல திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முகாமிற்கு ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி தலைமை தாங்கினார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் தண்டபானி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி, கன்னிவாடி பேரூராட்சிமன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், பேரூர் கழக செயலாளர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைந்த நல்லாட்சியில் மக்களுக்கான நலத்திட்டங்கள் அனைத்தும் இல்லம் தேடி வருகிறது. குறிப்பாக மக்களைதேடி மருத்துவம், மக்களை தேடி மருத்துவ முகாம், மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கு இலவச பேருந்து திட்டம் உட்பட மகளிர் மற்றும் பொதுமக்களுக்கான நலத் திட்டங்களாக உள்ளது. கோரிக்கை மனு கொடுத்தவுடன் மக்களுடன் முதல்வர் முகாமில் அதற்கான தீர்வு உடனே வழங்கப்படுகிறது பொதுமக்களின் சிரமங்கள் குறைக்கப்படுகிறது என்றார்.



நிகழ்ச்சியில் திண்டுக்கல் (மேற்கு) வட்டாட்சியர் சோ.செழியன், தனிவட்டாட்சியர் பிரபா, திண்டுக்கல் மேற்கு மண்டல துணை வட்டாட்சியர் ஜெயப்பிரகாஷ், கன்னிவாடி பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு, பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் மு.கீதா முருகானந்தம், கன்னிவாடி பேரூர்கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம், ரெட்டியார்சத்திரம் வட்டார காங்கிரஸ் தலைவர் நவாப் பட்டி முருகானந்தம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பார்த்தசாரதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜேஸ்பெருமாள், பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், கன்னிவாடி பேரூராட்சி திமுக அவைத் தலைவர் சர்புதீன், பேரூர் கழக பொருளாளர் பிச்சைமுத்து, மாவட்ட பிரதிநிதி பெருமாள், நகர இளைஞர் அணி அமைப்பாளர் பிரபு செல்வராஜ், ஒன்றிய பிரதிநிதிகள் சரவணன், பழனிச்சாமி, மயில்சாமி, கன்னிவாடி அரசு சமுதாயநலமைய மருத்துவர் காவியா, சுகாதார ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் மருதாயம்மாள், பாப்பத்தி, பிச்சைமுத்து, சித்ரா, உமா இந்திராகாந்தி, மகேஸ்வரன், கார்த்திகை செல்வி, சரண்யா, உட்பட பலர் கலந்துகொண்டனர். நிறைவாக பேரூராட்சி செயல் அலுவலர் நன்றி கூறினார்.

### இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

# நெல்லையில் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் சீரமைப்புப் பணி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு!

நெல்லை, டிச.25-

தென் மாவட்டங்களான திருநெல்வேலி,தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17.12 .2003 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் பெய்த கனமழையினால் விவசாய நிலங்கள்,பயிர்கள் உள்ளிட்டவை பெரிதும் சேதம் அடைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க அதிகன மழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகளை அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பொதுமக்களுக்கு வேண்டிய உதவிகளையும்,நிவாரண பொருட்களையும் வழங்கி வருகின்றனர்.

அதன்படி வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தூத்துக்குடி மாவட்டத்தில் அதி கனமழையினால் பாதிக்கப்பட்ட உவரி,ஏரல், திருவைகுண்டம் ஆகிய பகுதிகளில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பின்னர் அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம் நெல்லை மாவட்டம் தருவை பாலக்கால் கால்வாய் உடைப்பினால் சேதம் அடைந்த விவசாய நிலங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் செல்வி அபூர்வா,நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான்,மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் வேளாண்மை ஆணையாளர் முனைவர் சுப்பிரமணியன்,தோட்டக்கலை இயக்குனர் பிருந்தா தேவி ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்பு பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தென் மாவட்டங்களை பொருத்தவரையில் சுமார் 1லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் விலை நிலங்கள் மற்றும் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நெல் வாழை சிறு தானியங்கள் பயிரிட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளது மேலும் விவசாய பெருமக்கள் தங்கள் பாதிக்கப்பட்ட வல்லினங்களுக்கு இழப்பீடு நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். துறை சார்ந்த அலுவலர்களால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது.விரைவில் இழப்பீடு நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன், நெல்லை வேளாண்மை இணை இயக்குனர் முருகானந்தம், துணை இயக்குனர் கிருஷ்ணகுமார், வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கிய அமல ஜெயன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா – கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அயலக அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் முகமது பஷீர் தலைமையில் நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில அயலக அணி துணைச் செயலார் பாபு வினிபிரட், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த், மாவட்ட அயலக அணி தலைவர் சுஜின் ஜெகேஷ், துணை அமைப்பாளர்கள் ரபீக், நாகராஜன் உட்பட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கழக உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.




தந்தை பெரியாரின் 50 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மதுரை அவுட் போஸ்ட் பகுதியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர் மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கோ.தளபதி, முன்னாள் அமைச்சர் – உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம் உடன் கழக நிர்வாகிகள் வ. வேலுச்சாமி, பெ.குழந்தை வேலு,தனச்செல்வம், மூவேந்திரன், சரவணா புவனேஸ்வரி,காவேரி, குறும்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## வேளச்சேரியில் நிவாரண உதவி!

சென்னை, டிச. 25-

நியாய விலைக் கடை களில் வழங்கப்பட்டு வந்த வெள்ள நிவாரண நிதியினை வாங்க இயலாத ஒரு நபர் கார்டு தார்களான முதியோர் மாற்றுத் திறனாளிகளுக்கு கழகத்தினரின் உதவியால் அவர்களின் இல்லத்திற்கே சென்று ஊழியர்கள் முறைப்படி வழங்கினர்.

மிக்ஜாம் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய். 6000 நிவாரண உதவித்தொகை பெற ரேஷன் கடைக்கு வருகை தர இயலாத மாற்றுத்திறனாளிகள், முதியோர்களுக்கு ரேஷன் கடை ஊழியர்களின் உதவியுடன் வேளச்சேரி மேற்கு பகுதி) 175 வது வட்ட கழக நிர்வாகிகள் சார்பில் வி.மனோகரன் (அவைத் தலைவர்), ஜி.இ. தணிகை வேல் ஆகியோர் வழங்கினர். நிவாரண உதவித்தொகை பெற்றவர்கள் மனதார மக்கள் முதல் வரையும், தமிழக அரசையும் வெகுவாக பாராட்டினார்கள்.

### தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் பகுதியில்

# சாலைகள் - பாலங்கள் சீரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தார்!

சென்னை, டிச.25-

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பகுதியில் நடைபெற்றுவரும் சாலைகள் மற்றும் பாலங்கள் சீரமைப்புப் பணிகளை, இன்று 6வது நாளாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்.

அதிகனமழையினால் பாதிக்கப்பட்டுள்ள, தூத்துக்குடி மாவட்டத்தின் திருவைகுண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சேதமடைந்த சாலை சீரமைப்பு பணிகள் மற்றும் உடைந்த பாலங்களுக்குப் பதிலாக மாற்று பாதை அமைக்கும் பணிகளை, 6வது நாளாக, நேற்று முன்தினம் (23.12.2023), பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்தார்.

அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறியதாவது:-

தூத்துக்குடியில் 112 இடங்களில், சாலைகளில் உடைப்புகள் ஏற்பட்டு, சாலைகள் அடித்து செல்லப்பட்டு, போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதில், 84 இடங்களில் சாலைகள் செப்பனிடப்பட்டு, போக்குவரத்து சரிசெய்யப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் தெரிவித்தார்.

திருச்செந்தூர் - பாளையங்கோட்டை செல்லும் சாலைகளில், மூன்று இடங்களில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து இருந்தது. தற்போது இரண்டு இடங்களை நெடுஞ்சாலைத்துறை மூலம் சரிசெய்யப்பட்டு, போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு இடத்தில் 3 மீட்டர் நீளத்திற்கு சாலை உடைப்புகள் ஏற்பட்டு, சாலை துண்டிக்கப்பட்டுள்ளது. இதனை சீர்செய்ய, கிராவல் இங்கு எடுக்க முடியாத நிலை இருப்பதால், வெளியிலிருந்து கிராவல் கொண்டுவரப்பட்டு, நேற்று முதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பணிகள் நிறைவடைந்தவுடனேயே, திருச்செந்தூர், பாளையங்கோட்டை செல்லும் வழித்தடத்தில் போக்குவரத்து நடைபெறும் என்பதையும் தெரிவித்தார்.

ஆத்தூர் பாலமும், ஏரலுக்கு அருகே இருக்கின்ற குரும்பல் பாலமும் ஏறத்தாழ ரூ.19.94 கோடி மதிப்பீட்டில், அதிமுக. ஆட்சியில் கட்டப்பட்டது. அணுகு சாலை வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுவிட்டது. அப்பகுதியில் தரைப்பாலம் ஒன்று உறுதியாக இருக்கிறது என்பதை விளக்கி கூறினார்.

நெடுஞ்சாலைத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் அனைவரும் மேற்கண்ட இடங்களில் நடைபெற்றுவரும் பணிகளை ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தூத்துக்குடியில் இருந்து திருநெல்வேலி செல்லும் வழியில் உள்ள பாலம் தேசிய நெடுஞ்சாலை அலகினை சார்ந்தது. அதில் ஒரே ஒரு பில்லர் மட்டும் கீழே இறங்கியுள்ளது. பொறியாளர்கள் அடங்கிய தொழில்நுட்பக் குழுவினை உடனடியாக வரவழைத்து ஆய்வு செய்ய அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், போக்குவரத்து எவ்வித பாதிப்பும் இல்லாமல் தரைபாலம் வழியாக வாகனங்கள் சென்று வருகின்றன என்பதையும் குறிப்பிட்டார்.

இயற்கை சீற்றங்கள் ஏற்படும் போதும் முதலில் பாதிக்கப்படுவது சாலைகள்தான். இதுவரை இல்லாத அளவுக்கு தூத்துக்குடியில் 95 சென்டி மீட்டர் பெய்ததால், அதிகம் பாதிக்கப்பட்டது சாலைகள்தான். நெடுஞ்சாலைத்துறையை பொறுத்த வரையில், சாலைகளை தற்காலிகமாக செப்பனிடுவது என்பது உடனடியாக மேற்கொள்ள முடியும். நிரந்தரமாக சரிசெய்ய வேண்டுமென்றால், கோட்டப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் ஆகியோர் ஆய்வு செய்து, எந்த வகையில் நிரந்தரமாக சரிசெய்ய முடியும் என்பதை முடிவு செய்து, அதன் அடிப்படையில், திட்ட மதிப்பீடு தயார் செய்து, திட்ட மதிப்பீட்டிற்கு அதற்கான குழு ஒப்புதல் அளித்தவுடன், நிதித்துறையின் ஆலோசனைப் பெற்று, ஒப்பந்தம் கோரப்பட்டு, முதலமைச்சர் அவர்களிடம் ஆணை பெற்றுதான் நிரந்தர தீர்வு ஏற்படுத்த முடியும் என்பதை விளக்கி கூறினார்.

நெடுஞ்சாலைத் துறையை பொறுத்த வரையில், சாலைகள் ரூ.1,000 கோடி அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்த அமைச்சர், திருநெல்வேலி மாவட்டத்தில் 46 சாலைகளும், தூத்துக்குடி மாவட்டததில் 112 சாலைகளும், தென்காசி மாவட்டத்தில் 13 சாலைகளும், விருதுநகர் மாவட்டத்தில் 13 சாலைகளும், நாகர்கோவிலில் 5 சாலைகளும் சேதமடைந்துள்ளன என்று தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுகளின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், மற்றும் பொதுப்பணித்துறை சிறப்பு அலுவலர் இரா.விஸ்வநாத் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.


## கோயம்புத்தூர் மாநகராட்சி

மத்திய மண்டலம்

2023-24 - 2025-26 ம் ஆண்டிற்கான மாதாந்திர உரிம இனங்களுக்கான பொது ஏலம் / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 10354/2023/அ1(ம) நாள் : 20.12.2023

| | |
|---|---|
| காலம் | ஒப்படைக்கும் நாள் முதல் **31.03.2026** வரை (நிபந்தனைகளுடன்) |
| பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நாள் | **03.01.2024** |
| பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் இடம் | மத்திய மண்டல அலுவலக கருத்தரங்கு கூடம். |
| ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் நேரம் | காலை **10.00** மணி முதல் காலை **11.00** மணி வரை |
| மின் ஏலம் நடைபெறும் நேரம் | காலை **11.45** மணி முதல் நண்பகல் **12.45** மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கும் நேரம் | ❖ பிற்பகல் **2.45** மணி<br>❖ பொது ஏலம் முடிவடைந்த பின்பே ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். |
| பொது ஏலம் நடைபெறும் நேரம் | பிற்பகல் **3.00** மணி முதல் |

பொது ஏலம்/ மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஏல முன்வைப்புத் தொகையினை ரொக்கமாகவோ அல்லது **"ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி"** என்ற பெயரில் வரைவோலையாகவோ மத்திய மண்டல அலுவலக கருவூலத்தில் செலுத்தி தங்களைப் பற்றிய முழு விவரத்துடன் ஏலம் நடைபெறும் முந்தைய நாள் மாலை **5.00** மணிக்குள் மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

| வரிசை எண். | குத்தகை இனம் | கடை எண். | கடை அளவு சதுர அடி | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.83 நேரு ஸ்டேடியம் ரோடு முனுசாமி கார்டன்ஸில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகள் | 1 | 124 | **50,000/-** (கடை ஒன்றுக்கு) |
| 2 | | 1A | 76 | |
| 3 | | 2 | 124 | |
| 4 | | 2A | 76 | |
| 5 | | 3 | 124 | |
| 6 | | 3 A | 76 | |
| 7 | | 4 | 124 | |
| 8 | | 4 A | 76 | |
| 9 | | 5 | 124 | |
| 10 | | 5 A | 76 | |

**நிபந்தனைகள்**

1) ஒவ்வொரு கடையும் தனித்தனி இனமாக ஏலம் விடப்படும் .
2) ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ஏதாவது ஒரு கடைக்கு வைப்புத்தொகை செலுத்தினால் போதுமானது.
3) பொது ஏலத்திற்காக செலுத்தப்பட்ட வைப்புத்தொகை, சம்பந்தப்பட்ட கடைக்கு உறுதி செய்யப்படாத பட்சத்தில், அதே வைப்புத்தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வேறு கடைக்கு ஏலம் கோரலாம்.
4) ஏலத்தில் மாநகராட்சி நிர்ணயம் செய்யும் குறைந்தபட்ச வாடகை தொகைக்கு இருமடங்கு ஏலம் கோரும் நேர்வில், ஏலம் நடத்தும் அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கூடுதல் வைப்புத்தொகை **ரூ.2,00,000/-ஐ** உடனடியாக ரொக்கமாகவோ/DD ஆகவோ செலுத்தப்பட வேண்டும். தொகை செலுத்திய பின்னரே ஏலம், ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கு அனுமதிக்கப்படும்.
5) பொது ஏலம் குறித்தான நிபந்தனைகள் மத்திய மண்டல அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
6) உச்சப்பட்ச ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியவர்கள் ஏலம் முடிந்த மூன்று தினங்களுக்குள் ஒருவருட வாடகைத் தொகையினை வைப்புத்தொகையாகவும் மற்றும் **ரூ.20,000/-ஐ** மின் வைப்புத்தொகையாகவும் செலுத்தப்பட வேண்டும். தவறும்பட்சத்தில் அவரது கேள்வி தொகை ரத்து செய்யப்பட்டு பொறுப்புத்தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் பொது ஏல நிபந்தனைகளின் படி மேல் நடவடிக்கை தொடரப்படும்.
7) மேற்கண்ட வைப்புத்தொகை செலுத்திய பின்னர், மன்ற அனுமதி பெறப்பட்ட பின்னரே குத்தகை உரிம ஒதுக்கீடு ஆணை வழங்கப்படும்.

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 665/2023/வரைகலை/ செ.ம.தொ.அ/ கோவை /நாள் : 23.12.2023


## அனகாபுத்தூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

பல்லாவரம், டிச.25-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி, தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில் மிக்ஜாம் புயல் கன மழை வெள்ளத்தால் பல்லாவரம் தொகுதிகளில் பல்வேறு குடியிருப்பு பகுதிகள் முழுவதுமாக மழை நீரில் மூழ்கியது.

மழைநீர் சூழ்ந்ததால் பெரும்பாலான வீடுகள், கார்கள், இருசக்கர வாகனங்கள் என அனைத்தும் நீரில் மூழ்கின.

இதனால் பொது மக்கள் வீட்டில் இருந்து வெளியே வர முடியாத நிலை ஏற்பட்டது. மழை வெள்ளநீர் சூழ்ந்த பகுதிகளில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அப்பகுதிகளில் இருந்து நல திட்ட பணிகளை மேற்கொண்டார்.

அனகாபுத்தூர் அடையார் ஓரமாக உள்ள பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து இருந்ததால் அப்பகுதிகளில் படகுமூலம் சென்று மக்களுக்கு குடிதண்ணீர் பால் ரொட்டி மூன்று வேலை உணவு வழங்கினார். மழை நின்றதும் ராட்சத மோட்டார்கள் வைத்து மழை நீர் வெளியேற்றுவது மரங்களை வெட்டி உடனடியாக மின்சாரம் வழங்குவது போன்ற பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. அதைத் தொடர்ந்து அனகாபுத்தூரில் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்கு அரிசி பருப்பு, மளிகை சாமான்கள் பாய் போர்வை நிவாரண பொருட்கள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் கூறி வழங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து குரோம்பேட்டை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்துக்கும் மேற்பட் குடும்ப ங்களுக்கு கழக நாடாளுமன்ற தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள் வழங்கினார்.

அப்பொழுது மண்டலக்குழு தலைவர் வே.கருணாநிதி மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட "உடன்பிறப்புகளாய் இணைவோம்"என்ற மாபெரும் முன்னெடுப்புடன் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு" புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## (இரண்டாம் கட்டம்!)

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜீன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்." என கழகத்

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற 'தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜீன் 3ஆம் தேதி வரை, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு" உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை" உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1 முதல் எண்.1000 வரை இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த

7-11-2023 முதல் 10-11-2023 தேதிகளில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, இரண்டாவது கட்டமாக, **தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட இரசீது எண். 1001 முதல் 2100 வரை எண் கொண்ட இரசீதுகள்** வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 30ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள் தலைமைக் கழக இரசீது எண். 1001 முதல் 2100 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மேற்கு
9) காஞ்சிபுரம் வடக்கு
10) காஞ்சிபுரம் தெற்கு
11) விழுப்புரம் வடக்கு
12) கள்ளக்குறிச்சி தெற்கு
13) கடலூர் கிழக்கு
14) கடலூர் மேற்கு
15) தஞ்சை தெற்கு
16) திருவாரூர்
17) திருச்சி தெற்கு
18) பெரம்பலூர்
19) அரியலூர்
20) தருமபுரி கிழக்கு
21) தருமபுரி மேற்கு
22) கிருஷ்ணகிரி கிழக்கு
23) சேலம் கிழக்கு
24) சேலம் மத்திய
25) திருப்பூர் வடக்கு
26) ஈரோடு வடக்கு
27) நீலகிரி
28) மதுரை வடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) விருதுநகர் வடக்கு
32) தென்காசி வடக்கு
33) தென்காசி தெற்கு
34) தூத்துக்குடி வடக்கு

**குறிப்பு:** தலைமைக் கழக இரசீது எண். 2100 க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
23 - 12 - 2023

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 50வது நினைவுதினத்தில் கழகப் பொருளாளர் – முன்னாள் ஒன்றிய அமைச்சர் டி.ஆர்.பாலு எம்.பி., மன்னார்குடியில் உள்ள பெரியார் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞான சேகரன், நகரச் செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்றத் தலைவர் மன்னை.த.சோழராஜன், ஒன்றியச் செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேறி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.



திருச்சியில் தந்தை பெரியார் அவர்களின் 50 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளரும் மாநகர மேயருமான அன்பழகன்,சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, ஸ்டாலின் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் மற்றும் டோல்கேட் சுப்பிரமணி, முத்துச்செல்வம், விஜய் ஜெயராஜ், மாத்தூர் கருப்பையா, கதிர்வேல் ராமதாஸ், தொ.மு.ச. குணசேகர், ராமதாஸ், புஷ்பராஜ், கலைச்செல்வி, மோகன் தாஸ், வக்கீல் இளங்கோவன், போட்டோ கமல், நாகராஜ், கனகராஜ், ராம்குமார், துர்கா தேவி, கிராப்பட்டி செல்வம், கலைச்செல்வி, கருத்து கதிரேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கனமழை: தென் மாவட்டங்களுக்கு 14 வாகனங்களில்

# ரூ.65.84 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அனுப்பி வைத்தார்!

நாமக்கல், டிச. 25 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில், வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம் சார்பில் 8 குடிநீர் வாகனங்களில் 1.53 லட்சம் லிட்டர் குடிநீர் வாகனங்கள் அனுப்பும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார் . நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இதையடுத்து கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. செய்தியாளர்களிடம் பேசுகையில், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் டிசம்பர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, வெள்ள பாதிப்புகளை சீர் செய்திடவும், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வும், அமைச்சர் பெருமக்கள் நிய மிக்கப்பட்டு, அவர்களுடன் இணைந்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதலாக அமைச்சர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல், மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, அதி கனமழையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கு நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக 21.12.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி சென்றடைந்தார். தூத்துக்குடி, மறவன்மடம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, வெள்ள சேத விவரங்களையும், அவர்களது கோரிக்கைகளையும் கேட்டறிந்து, அவர்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார்.

மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த சில தினங்களுக்கு முன் அதிகனமழை பெய்து வருவதை தொடர்ந்து அங்கு பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தேவையான ரொட்டி பாக்கெட்டுகள், தண்ணீர் பாட்டில்கள், பிஸ்கெட் பாக்கெட்டுகள், பால் பவுடர், உலர் பழங்கள், மளிகை பொருட்கள், பாய்கள், போர்வைகள், துண்டுகள், மெழுகுவர்த்திகள், தீப்பெட்டிகள், லுங்கிகள், நைட்டிகள், நேப்கின் பேடுகள் உள்ளிட்ட நிவாரண பொருட்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

அதன்படி, நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் கடந்த 18.12.2023 அன்று முதல் 22.12.2023 வரை தென் மாவட்டங்களுக்கு மொத்தம் 14 கனரக வாகங்களில் ரூ.65.84 இலட்சம் மதிப்பீட்டிலான நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு குடும்பத்திற்கு தேவையான 5 கிலோ அரிசி, ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உப்பு, ஒரு கிலோ சர்க்கரை, 500 கிராம் கோதுமை மாவு, 500 கிராம் ரவை, 300 கிராம் மிளகாய்த்தூள், 200 கிராம் சாம்பார் பொடி, 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் ரசப் பொடி, 100 கிராம் டீத்தூள் ஆகியவை அடங்கிய நிவாரண பொருட்கள் தொகுப்பாக தயார் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கிடும் பொருட்டு, நாமக்கல் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், மொத்தம் 1.53 இலட்சம் லிட்டர் தண்ணீர் 8 குடிநீர் வாகனங்களில் (டேங்கர் லாரிகள்) 23.12.2023 அன்று நண்பகலுக்குள் சென்றடையும் வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த நிவாரண பொருட்களை முறையாக அனுப்பி வைத்திட பெரும் முயற்சி எடுத்து அதை ஒருங்கிணைத்து 14 லாரிகளில் தென் மாவட்டங்களுக்கு அனுப்ப பாடுபட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பல்வேறு அரசுத்துறை சார்ந்த அலுவலர் பெருமக்களுக்கும், குறிப்பாக வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் கூட்டுறவுத்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலக பெருமக்கள் மற்றும் பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மிக குறுகிய காலத்தில் ரூ.66.00 இலட்சத்திற்கும் மேலான நிவாரண பொருட்களை வழங்கி பெரும் முயற்சி எடுத்த நம் மாவட்டத்தை சேர்ந்த தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்வேறு சமூக அமைப்புகள் சார்ந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நிகழ்வில் இராசிபுரம் நகர் மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் திருகுணா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் அரங்கசாமி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினரும் -

# திரைப்பட தயாரிப்பாளருமான கோவை முருகேசன் மறைவு!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 25-

கோவை மாநகர் மாவட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினரும் - திரைப்பட தயாரிப்பாளருமான கோவை முருகேசன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கல் செய்தியில்,

கோவை மாநகர் மாவட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு முன்னாள் உறுப்பினரும் திரைப்பட தயாரிப்பாளருமான கோவை முருகேசன், நேற்று முன்தினம் (23.12.2023) இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

### கரூர் மாவட்டத்தில் – தனியார் துறை

# வேலைவாய்ப்பு முகாம் - பணி நியமன ஆணைகள் வழங்கல்!

## செ.ஜோதிமணி எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம் - இரா.இளங்கோ - கா.சிவகாம சுந்தரி பங்கேற்பு!

கரூர். டிச.25-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கரூர் மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.

கரூர் தாந்தோணிமலை அரசு கலை கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டு துறை. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கரூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது. பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் தலைமையில் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் இரா.இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் கா.சிவகாமசுந்தரி, ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவில் கரூர் மாவட்டத்தில் 3 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே இரண்டு வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

கல்வியுடன் மற்ற போட்டித் தேர்வுக்கு தயாராக வேண்டும். இன்றைய காலத்தில் தமிழ்நாடு அரசு உங்களுக்காக முன்வந்து தொழில் துறைகளை தெரிந்து கொள்வதற்கும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்குவதற்கும் எண்ணற்ற திட்டங்களை வழி வகுத்து நடைமுறைப் படுத்தி வருகின்றது.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உங்கள் சான்றிதழை பதிவு செய்து கொள்வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் அரசு வேலைக்குச் செல்லும் போது உங்களுக்கு மதிப்பெண் அடிப்படையில் முன்னுரிமை வழங்குவார்கள்.

இப்பொழுது உள்ள சூழ்நிலையில் போட்டி தேர்வில் மறைமுக தேர்வுக்கான பணியும், நேர்முக தேர்வுக்கான பணியும் நடைபெற்று வருகிறது.

கரூர் மாவட்டத்தில் தலைமை நூலகம் இப்பொழுது தமிழ்நாட்டிலேயே முதன்மை நூலகமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது நூலகம் மாநில அளவில் பரிசு பெற்றிருக்கின்றார்கள். ஏறத்தாழ தினசரி 60க்கும் மேற்பட்டோர் போட்டித் தேர்வுக்கும், வங்கி தேர்வுக்கும், மத்திய அரசு பணிக்கும் தயாராகி வருகிறார்கள். அனைத்து துறைகளிலும் உதவியாளர்கள் முதல் மேல்நிலை அதிகாரி அளவுக்கு போட்டி தேர்வு உள்ளது.

அதேபோல் ஆசிரியர் பணிக்கும் காவல்துறை மருத்துவத்துறை போன்ற பல்வேறு துறைகளுக்கு போட்டித் தேர்வும் உள்ளது. தனியார் துறை நிறுவனங்கள் நமது மட்டத்திற்கு உருவாகும். அதிக காலிப்பணியிடங்கள். அதிக வாய்ப்புகள் இடம்பெற இருக்கின்றது. ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறக் கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. அப்பொழுது நிறுவனங்கள் தொடங்கும் பொழுது அனைவருக்கும் கரூர் மாவட்டத்திலே வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்பு அதிகமாக உள்ளது என்றார்.

தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், மொத்தம் பங்கு பெற்ற நிறுவனம் 152. இதில் மாற்றுத்திறனாளிகளுக்காக பங்கு பெற்ற நிறுவனம் 7. அரசு துறை சார்ந்த திட்டங்கள் குறித்து கண்காட்சி அரங்குகள் 10. திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் 3. வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்ட நபர்கள் 2296, பல்வேறு நிறுவனங்களில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் 593 பேர். மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) ஆ.ஜோதிமணி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் டிடி சாந்தி, மண்டல தலைவர் எஸ்.பி.கனகராஜ் மற்றும் அரசு அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! சி.சண்முகம் ஏற்பாடு!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## குதிரை வண்டி - மாட்டு வண்டி பந்தயத்தை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை. டிச.25-

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் குளவாய்ப்பட்டி சி.சண்முகம் அவர்களது ஏற்பாட்டில்

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் மாபெரும் மாட்டு வண்டிகுதிரை வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கொடியசைத்து துவங்கி வைத்து, வெற்றி கோப்பைகள், பரிசுத்தொகை வழங்கி சிறப்பித்தார்கள்.

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், புதுக்கோட்டை நகர செயலாளர் ஆ.செந்தில், ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், ஓ.எஸ்.வெங்கடாசலம், மு.க.ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், கீரனூர் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் பி. அண்ணாத்துரை, மாவட்ட கவுன்சிலர்கள் த.செல்வம், கை. பழனிச்சாமி, குளவாய்ப்பட்டி சின்னராசு, கீரனூர் பேரூராட்சி தலைவர் கே.எம்.கே. ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் முனைவர் செ.குறிஞ்சி வானன், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், மு. கலைஞர் கருணாநிதி, ஆ.ராஜேந்திர சோழன், வி.ராஜராஜ சோழன், மு.ராஜதுரை, ஆர். கே.ரெத்தினசபாபதி, வி.டி.செல்வம், எஸ். வி.ஆர்.அர்வின் ராஜா,

ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.முத்து, கோ.சின்னப்பா, கு.காத்தையா, ர.கலையரசி ரவி, ப.ராஜ்குமார், க.ரெ.கரிகாலன், சா.சின்னத்துரை, ஏ. வீரசிங்கம், கே.ஆர்.பாலமுத்து, ஆர்.சி.வி.வீரமணி, பி.சி.என்.கண்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பழனிச்சாமி, க. வீரையா, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆரோக்கியசாமி, கீரனூர் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் ச.ரமேஷ், டி.கே.டி.வல்லரசு, தகவல் தொழில்நுட்ப அணி ராஜ ராஜன், ராஜா ராம் உள்ளிட்ட 10 கிலோமீட்டர் தூரத்திற்கு சாலைகளின் இரு புறங்களிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், பொதுமக்கள் பந்தயத்தை கண்டு ரசித்தனர். குதிரை வண்டி பந்தயம் மற்றும் மாட்டு வண்டி பந்தயத்தில் வெற்றி பெற்று, முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களுக்கு வெற்றி கோப்பை வழங்கப்பட்டது.




கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வேளாண்மை உழவர் நலத்துறை (தோட்டக்கலை துறை) மூலம் மலிவு விலையில் 70 டன் காய்கறிகள் பொதுமக்களுக்கு தினமும் வழங்கிடும் வகையில், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் இருந்து 50 வாகனங்களில் அனுப்பப்பட்டது. இதனை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வாகனங்களை அனுப்பி வைத்தார். விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி, ஆபூர்வா, அரசு வேளாண்மை நலத்துறை ஆணையர் சுப்பிரமணியன், அரசு வேளாண்மை வணிகம் மற்றும் வேளாண்மை விற்பனைக்குழு இயக்குனர் நடராஜன், அரசு தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை இயக்குனர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி, வேளாண்மை பொறியியல் துறை முதன்மை பொறியாளர் முருகேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராமலட்சுமி கங்கா நாராயணன், நகரச் செயலாளர் பாரதி கனேசன், கோவில்பட்டி கிழக்கு ஒன்றியச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் மேல்விஷாரம் சாதிக் பாஷா, நகர் நீர்நிலை புறம்போக்கில் வசித்து வந்த குடியிருப்பு வாசிக்களுக்கு வீடு கட்டுவதற்கு இடம் வழங்குவதற்காக ஆற்காடு ஒன்றியம், தென் நந்தியாலம் ஊராட்சியில் தேர்வு செய்யப்பட்ட இடத்தில் கடந்த 4 நாட்களாக சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், வருவாய் கோட்டாட்சியர் மனோன்மணியம், நகராட்சி தலைவர் அமீன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், ஊராட்சி மன்ற தலைவர் தேவி, ஒன்றிய செயலாளர் ஏ.வி.நந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நிர்மலா சீத்தாராமன் சொல்வது சரியா? தமிழ்நாட்டை மாற்றாந்தாய் பிள்ளையாக பார்க்கக் கூடாது!

# தேசிய பேரிடராக அறிவித்து, கேட்ட நிதியைக் கொடுத்தே ஆக வேண்டும்!

## "மின்னம்பலம்" இணையதளத்தில் மக்கள் கருத்து!

**தமிழ்நாட்டில் கடும் மழை வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து, நிதி ஒதுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்ததற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அலட்சியமான, தான்தோன்றித்தனமான கருத்தினை நேற்று முன்தினம் வெளிப்படுத்தினார்.**

"நிர்மலா சீதாராமன் சொல்வது சரியா?" என்ற கேள்வியை "மின்னம்பலம்" இணையதள தொலைக்காட்சி பொதுமக்களிடம் எழுப்பியது. அக்கேள்விக்கு பொதுமக்கள் அளித்த பதில்களை இங்கே தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

அது வருமாறு:



**திருமதி கலா:** தமிழ்நாட்டிற்கு இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஓட்டு கேட்க உரிமை இருக்கும் போது, எங்களுக்கு வெள்ள நிவாரண மாக தேசிய பேரிடராக அறிவிச்சுதான் ஆக வேண்டும். நாங்களும் தேசியத்தில் சேர்ந்துதான் இருக்கோம். நாங்கள் பெத்த பிள்ளைகளும் இராணுவத்தில் போய் சேர்ந்து நாட்டு மக்களை காப்பாற்றப் போகிறார்கள். அந்த மாதிரி இருக்கும் போது, இங்கே ஏன் செய்ய மாட்டேன் என்கிறார்கள்.

அதற்காக சுனாமி, நில நடுக்கம் வரவேண்டுமா? இது எப்போதும் பெய்யாத மழை, அதிகபட்சமாக நிறைய சென்டி மீட்டர் மழை பெய்து இருக்கிறது. அதுவும் திருச்செந்தூரிலெல்லாம் தலைக்கு மேலே வெள்ளம் போனது.

இன்னும் எவ்வளவு மக்கள் இறந்து போனார்கள் என்பது குறித்து கணக்கு எடுப்பதற்கே அந்த ஊருக்கு போக முடியவில்லை. அந்த மாதிரி நிலைமை இருக்கும்போது, இதனை தேசிய பேரிடர் என்று அறிவித்தால் என்ன? எல்லாம், நானே ராஜா, நானே மந்திரியா? நாங்கள் எல்லாம் சேர்ந்து ஓட்டு போட்டால் தான் யாருமே பிரதமராக உட்கார முடியும். முதல்வராகவும் உட்காரவும் முடியும்.

அவர்கள் வந்து ஜீ..ஜீ... என்று சொல்கிறார்கள். இந்தியில் போலோ, ஹவோ, அச்சா அந்த மாதிரி பேசுவதினால் அவர்கள் அங்கே போய்விடுறார்கள். நாங்கள் ஐயா, ஐயா என்று கேட்பது அவர்கள் காதுகளில் என்ன கேட்கிறதோ? அவருக்கு தமிழ் தெரியவில்லை. மலையாளம் தெரியவில்லை, தெலுங்கு தெரியவில்லை, கன்னடம் தெரியவில்லை, அதனாலே தமிழர்கள் அவர்களுக்கு கண்ணுக்குத் தெரியவில்லை.

தமிழர்கள் எல்லாம் மாற்றாந்தாய் குழந்தைகள் அவர்களுக்கு. அவர்களை சும்மா ஓரப் பார்வையாக பார்க்கிறார்கள். யாருமே இந்தக் காலத்தில் மக்களுக்காக கிடையாது. அவர்களுக்கு (நிர்மலா சீதாராமன்) பதவி ஆசை. அந்த பதவி ஆசைக்கு, அந்தப் பதவி கொடுக்கின்ற அந்த இந்திகாரர்களுக்கு அவர் (நிர்மலா சீதாராமன்) ஜால்ரா தட்டுகிறார்கள். அந்தக் கட்சி திரும்ப திரும்ப தன்னை நிதி அமைச்சராக போடுவார்கள், நாம கவுரவமான மினிஸ்ட்டர், மினிஸ்டர் என்று சொல்லி உலகை சுத்திப் பார்க்கலாம். இதுதான் அந்த அம்மாவினுடைய ஆசை.



**சந்திரசேகர்:** இந்த 450 கோடி ரூபாய் கொடுத்தது தவறோ, சரியோ என்பது முக்கியம் கிடையாது. இது முதல் தவணை என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களின் குழு வந்து அவர்கள் பார்க்கப் போகிறார்கள். நானே ஒரு கம்பெனி வைத்து இருக்கிறேன் என்கிற போது ஒருத்தனுக்கு 5000 ரூபாய் கொடுத்தேன் என்கிற போது, அந்த ஐந்தாயிரம் ரூபாய்க்கு என்ன செலவு என்பதை பார்த்துவிட்ட பிறகு தான் அடுத்து பத்தாயிரம் ரூபாயை அவனுக்கு கொடுப்பேன்.



**வீரதமிழன்:** ஒரே நேரத்தில் இவ்வளவு மழை பெய்துவிட்டது. அதனை பேரிடராக அறிவித்து நிவாரணம் செய்யலாம். ஏன் என்றால் இதில் எல்லோரும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நீங்கள் நிதி அமைச்சர், அங்கெல்லாம் கொடுத்த மாதிரி இங்கே கொடுங்கள். கணக்கெடுத்துப் பாருங்கள். இன்சால்மெண்ட் கணக்கை விடுங்கள். இங்கே கேட்டு இருக்கிறார்கள் இல்லையா, அதனை கொடுங்கள். 12 ஆயிரம் கோடி ரூபாய் கேட்டால் 450 கோடி ரூபாய் தருகிறோம் என்று சொல்கிறீர்கள்.

ஏன் ஒன்றியக் குழு இங்கே வந்து பார்த்து பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அதனை கொடுத்துவிட்டு போகலாமே. அங்கேயெல்லாம் கொடுத்த மாதிரி இங்கேயும் கொடுக்கலாமே.

ஏன் தமிழ்நாட்டின் வரி பணத்தை வாங்கிக் கொள்கிறீர்கள். இந்த 6 மாதத்தில் ரூ.23 ஆயிரம் கோடி அவர்களுக்கு வருமானமாக வந்திருக்கிறது. அதிலிருந்து கொடுத்து இருக்கலாமே. இங்கே இருந்து தானே சம்பாதித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து வரி வந்து இருக்கிறது, இல்லையா? அந்த வரியில் இருந்து கொடுத்து இருக்கலாமே. எக்ஸ்ட்ராவா கொடுக்கப் போறாங்க. நாங்கள் வரி கட்டுகிறோம். அதனை கணக்குப்போட்டு பார்க்கட்டும்.

இந்த ஆறு மாதத்தில் ஜி.எஸ்.டி. வரி எவ்வளவு கட்டியிருக்கிறோம். அதிலிருந்து கணக்குப் பார்த்தால் அவர்கள் கொடுத்திருக்கின்ற பணம் ஒரு சதவிகிதம் கூட இல்லையே.



**ரமேஷ்:** தூத்துக்குடியை பார்த்தால் இது வரலாறு காணா வெள்ளமாக சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு இருநூறு வருடமோ, முன்னூறு வருடமோ என்று சொல்கிறார்கள். மக்கள் எவ்வளவோ வாழ்வாதாரத்தை இழந்து இருக்கிறார்கள். மக்களுக்கு கொடுக்கப்படும் ரூபாய் 5,000, ரூபாய் 6,000 கூட போதாது. இது கண்டிப்பாக ஒன்றிய அரசு செய்வது சரி கிடையாது.

நாங்கள் என்ன இந்தியாவுக்கு வெளியேவா இருக்கின்றோம். பாகிஸ்தானிலேயா இருக்கிறோம். இந்தியாவில்தான் இருக்கிறோம். பாரத மாதா என்பது எங்களுக்கும் தான். ஓ.கே.தானே. தமிழ்நாடு பாரதமாதாவில் தான் இருக்கிறது. அப்படி என்கிற போது, இந்தியாவில் இது ஒரு பகுதி தானே தமிழ்நாடு. எல்லா மாநிலங்களையும் தனியாகத் தானே பார்க்க வேண்டும். இதனை பேரிடராக அறிவிக்க வேண்டும்.

மாநில அரசும் சரி, கார்ப்பரேஷனும் சரி வேலை செய்தார்கள். நாம் யாரையும் குறையே சொல்லக்கூடாது. மத்திய அரசு கண்டிப்பாக இதனை பேரிடராக அறிவிக்க வேண்டும். கேட்ட நிதியை ஒதுக்க வேண்டும். சில பேர் செய்கின்ற தவறினால் என்னை பொறுத்தவரைக்கும் அடி மட்டத்தில் இருக்கிற மக்கள் பாதிக்கக்கூடாது. அவர்களுக்கு கொடுப்பது சரியாக போய் சேர வேண்டும். அதில் ஒன்றிய அரசின் உதவி கண்டிப்பாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டை தனிநாடாக பார்க்கக் கூடாது.



**ஷஹாப்:** தமிழ்நாட்டை மாற்றந்தாய் பிள்ளையாக பார்க்கக்கூடாது. ஒன்றிய அரசு அது மாதிரிதான் பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சென்னை மக்கள் எவ்வளவோ அவதிப்பட்டார்களோ அதனை விட இருமடங்கு நெல்லை, தூத்துக்குடி போன்ற மற்ற மாவட்டங்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதில் கவனம் செலுத்த வேண்டும். சும்மா அங்கே உட்கார்ந்து கொண்டு இப்படி பேசாமல், களத்தில் இறங்கி வேலை செய்து விட்டு பேச வேண்டும். அவர்கள் (நிர்மலா சீதாராமன்) வேலை செய்யாமல் மற்றவர்களை சொல்கிறார்கள், சரியாக வேலை செய்யவில்லை என்று. சரியாக வேலை செய்யவில்லை என்று மட்டும் சொல்லத் தெரிகிறது இல்லையா, இவ்வளவு பாதிப்பு இருக்கிறது என்பது அவர்களுக்கே தெரிகிறது என்கிறபோது, அதற்கு தேவையான நிதியை கொடுத்து உதவ வேண்டும்.

பிரச்சினையை தீர்க்க அவர்கள் இறங்க வேண்டும். பொருளாதாரத்தை காக்கின்ற அமைச்சர் நிர்மலா சீதாராமன் தானே. அவர்கள் தான் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து இறங்கி வேலை செய்தால் மக்களுக்கு என்ன பாதிப்பு என்பது அவர்களுக்குத் தெரிய வரும். இது தேசிய பேரிடர் கிடையாது என்பது பெரிய தவறு. இப்படி சொல்வதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அநீதி செய்கிறார்கள் என்றுதான் அர்த்தம். தேசிய பேரிடர் என்று அறிவித்தே ஆக வேண்டும். கேட்ட நிதியை கொடுத்தே ஆக வேண்டும். ஏன் என்றால் ஜி.எஸ்.டி. என்று நிறைய வரி மற்றும் நிதியை தமிழ்நாட்டில் இருந்து பல மடங்கு அங்கே போகின்றது. அதில் சும்மா பத்து சதவிகிதம் தான் அவர்கள் திருப்பி தமிழ்நாட்டிற்கு கொடுக்கிறார்கள்.



**மேரி:** எல்லா இடங்களிலும் தான் பாதிக்கப்பட்டு இருக்கிறது. எல்லா இடங்களுக்கும் தான் நிதி கொடுக்க வேண்டும். பாவம் மக்கள். இருக்கிறவர்களுக்கு, இல்லாதவர்களுக்கு என்று எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். இருக்கிறவர்களை விட இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். சென்னையில் எல்லோரும் நல்லாதான் இருக்கிறார்கள். பாவம் தூத்துக்குடி, நெல்லையில் கழுத்து வரைக்கும் தண்ணீர் வந்து எவ்வளவோ பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். பிரதமர் மோடி, அவர் ஊருக்குத்தான் செய்கிறார். தமிழ்நாட்டிற்கு இதுவரை எதுவும் செய்தது கிடையாது. அவர்கள் செய்தால் நன்றாக இருக்கும். அவர்கள் செய்யவில்லையே.






**ராஜ்குமார்:** எல்லாவற்றுக்கும் ஜி.எஸ்.டி. போடுகிறார்கள், நாங்கள் குடிக்கின்ற டீக்குக் கூட ஜி.எஸ்.டி. போடுகிறார்கள். தமிழ்நாட்டிற்கு வெள்ளப் பாதிப்புக்கு அவர்கள் கொடுத்து தானே ஆக வேண்டும். தமிழ்நாட்டில் பேரிடரால் எவ்வளவு பாதிக்கப்பட்டு இருக்கிறது. எவ்வளவு மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் ஓர வஞ்சனை செய்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டிற்கு எதுவும் செய்வது கிடையாது. ஓட்டு மட்டும் போட வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார்கள். ஏன் செய்வது கிடையாது என்றால் தமிழ்நாட்டில் அவர்களால் கால் ஊன்ற முடியவில்லை. ஒரு சீட் கூட அவர்களால் வர முடியவில்லை. ஓட்டுப்போட்டு அவர்களை சீட்டில் உட்கார வைத்தால் அப்போதான் நிதி தருவார்கள். அவர்களால் இங்கே உட்கார முடியவில்லை இல்லையா, அதனால் தான் நிதி தர மறுக்கிறார்கள்.



**ஞானசேகர்:** இதனை கண்டிப்பாக தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும். ஏன் என்றால் தமிழ்நாடு இந்திய நாட்டில் தானே இருக்கிறது. அப்போது இதனை தேசிய பேரிடராக அறிவித்துதான் ஆக வேண்டும். அதேபோல நமக்கு ஒதுக்குகின்ற நிதியும் பார்த்தீர்கள் என்றால் குறைவாகத்தான் ஒதுக்குகிறார்கள்.

ஆனால் வட மாநிலங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்குகிறார்கள். இதுதான் ஓர வஞ்சனை. குறைந்தபட்சம் என்னைப் பொறுத்த வரைக்கும் , நான் படித்த வரைக்கும், பார்த்த வரைக்கும் பார்த்தால் கண்டிப்பாக பத்தாயிரம் கோடி வரைக்கும் கொடுக்க வேண்டும். அதாவது இந்த ஒரு பாதிப்புக்கு இப்போது தென் மாநிலங்களில் நான்கு மாவட்டங்களில் நடந்திருக்கிறது. அதனையும், இதனையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவர்கள் ஒதுக்கிய நிதி ஒன்றுமே கிடையாது.



**ராவ்:** தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும். பாதிப்பு அதிகமாக இருக்கிறது. இந்த அம்மா (நிர்மலா சீதாராமன்) சொல்வது தவறு. இங்கே பாருங்கள், இந்த பத்திரிகையில் ஆயிரம் வீடுகள் இடிந்தது, பாதித்து இருக்கிறது என்று போட்டு இருக்கிறார்கள். இவர்களா வந்து கட்டிக் கொடுக்கப்போகிறார்கள். இந்த அம்மா வேண்டும் என்றே பழி வாங்குகிறார்கள்.

இந்த அம்மா தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்மணிதான். திருச்சியைச் சேர்ந்த பெண்மணி. இவங்களைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். யார், எப்படி, முன்பு எப்படி இருந்தார்கள் என்று. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த பெண் இவர். அங்கே போய் இப்படிப் பேசலாமா? இவரது பேச்சு தமிழ்நாட்டு மக்களுக்கு துரோகம் செய்வது மாதிரி இருக்கிறது. இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் இங்கே மக்கள். இதனை தேசியபேரிடராக அறிவிக்க வேண்டும் என்று கோருவது சரியானதுதான். அவர்கள் பணம் கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.



**நாராயணன்:** இதனை தேசிய பேரிடராகத்தான் அறிவிக்க வேண்டும். ஏன் என்றால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சென்னையைப் பார்த்தீர்கள் என்றால், எங்கும் இடுப்பளவிற்கு தண்ணீர் இருந்தது. நான் நடந்துச் செல்லும் போது இடுப்பளவிற்கு தண்ணீர் இருந்தது. அந்த அளவிற்கு பெரும் பாதிப்பு.

இதே போன்று தெற்கேயும் நான்கு மாவட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி எல்லாம் மிகவும் சேதாரமாகிவிட்டது. இன்னும் அங்கே எல்லாம் சரியாக ஆகவில்லை. ஒன்றியத்திற்கென்று தனியாக ஜி.எஸ்.டி. வரி வாங்குகிறார்கள். அது அவர்களுக்கு வருகின்ற வருமானம் தானே, மக்கள் கொடுக்கின்ற வரி தானே. அதில் கொடுக்கலாம் இல்லையா. ஒரு பன்னிரெண்டாயிரம் கோடி ரூபாய் கேட்டிருக்கிறார். அதனை கொடுத்தால் உதவியாக இருக்கும் மக்களுக்கு. ஏன் என்றால் மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். மொத்தம் எட்டு மாவட்டங்கள் பாதித்து இருக்கிறது.

தமிழ்நாட்டில் இப்போது வெள்ள நிவாரணம் ஆறாயிரம் ரூபாய் கொடுத்தார் முதல்வர் . அது எல்லாருக்கும் வந்து சேர்ந்துவிட்டது. அதே மாதிரி அந்த மாவட்டங்களுக்கும் அறிவித்து இருக்கிறார் முதல்வர். ஆறாயிரம் ரூபாய் அவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்றால் பணம் வேண்டும். அப்போது அவர்கள் கொடுத்தால் தானே இங்கே இவர் பணம் கொடுக்க முடியும்.



**சதீஷ்:** எல்லாவற்றுக்குமே நாம் ஒன்றிய அரசை சார்ந்து தான் இருக்கிறோம். ஒன்றிய அரசு பொதுவாக தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, தென் மாநிலங்கள் முழுவதுக்குமே அவர்கள் உதவி எதுவும் செய்ய மாட்டார்கள். வட மாநிலங்களுக்கு செய்கின்ற அளவிற்கு தென் மாநிலங்களுக்கு அவர்கள் எப்போதுமே செய்தது கிடையாது. ரயில் விடுவதாக இருந்தாலும் சரி, வேறு எந்த திட்டங்கள் அறிவிப்பதாக இருந்தாலும் சரி அப்படித்தான் செய்வார்கள்.

தற்போது மழை அளவைப் பார்த்தால் நூறு ஆண்டுகளுக்கு இல்லாத அளவிற்கு மழை பெய்து இருக்கிறது. தூத்துக்குடியில் நூறு வருடமாக பெய்யாத மழை இங்கே பெய்து இருக்கிறது. இது எதிர்ப்பார்த்ததை விட அதிகம்தான். ஏன் ரயிலே இரண்டு நாளாக ஒரே இடத்தில் நின்று விட்டது. அதில் பயணித்தவர்கள் திண்டாடினார்கள். அது சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டை சேர்ந்ததுதானே. இதனை தேசிய பேரிடராக அவர்கள் அறிவிக்கலாம்.



**ஜொய்ஸ்:** நிறைய பாதிப்பு நடந்திருக்கிறது. இதில் நான் சென்ட்ரல்கவர்ன்மெண்ட், மோடியைத்தான் குறைசொல்வேன். அவர் பொதுவாகவே சரிஇல்லை என்று தான் நான் சொல்வேன். ஏன் என்ற கேள்வி நிறைய இருக்கு, ஆனா அவர் சரியில்லை. முதல்லே அவரால் தான் நாங்கள் நிறைய பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் முழுக்க முழுக்க அவர்தான் காரணம். கண்டிப்பாக கேட்ட தொகையை கொடுக்கலாம். ரூ.400 கோடி கொடுத்ததெல்லாம் மிகவும் குறைவானது. இதனை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என்று சொன்னது தவறுதான். ஏன் அறிவிக்க முடியாது என்று தான் நான் கேள்வி கேட்கிறேன்?

இவ்வாறு 'மின்னம்பலம்' இணையதள தொலைக்காட்சியில் பொதுமக்கள் பேட்டியளித்தனர்.

நன்றி :
**'மின்னம்பலம்'**
இணையதளம்



திராவிடமாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மக்களைத்தேடி அனைத்து நலத்திட்டங்களும் வருகிறது என்று கன்னிவாடியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். முகாமில் பதிவு செய்யும் இடத்திற்கு சென்ற அவர் மக்களுக்கான தீர்வுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். உடன் ஒன்றிய பெருந் தலைவர் ப.க.சிவகுருசாமி, மாவட்ட தி.மு.க. பொருளாளர் சத்தியமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.



கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மாபெரும் தூய்மை பணி நிகழ்ச்சியை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் தொடங்கி வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.ராதா கிருஷ்ணன், நகர மன்ற தலைவர் மருத்துவர் சங்கவி முருகதாஸ், நகர மன்ற துணை தலைவர் ராணி தண்டபாணி, நகர மன்ற ஆணையாளர் மற்றும் நகர கழக செயலாளர் க. தண்டபாணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தி.வேல்முருகன், கனக. கோவிந்தசாமி, நகர துணை செயலாளர் எஸ். இராமு, நகர மன்ற உறுப்பினர் ஆட்டோ பாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர் தர்ம.மணிவேல், ஊராட்சி மன்றத் தலைவர் வசந்த், நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### அரசு நிர்வாகத்திலும் அரசியலமைப்புப் பதவிகளிலும்

# நிர்வாகத் திறனோடு செயல்பட்டவர் எம்.எம்.ராஜேந்திரன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, டிச. 25 -

அரசு நிர்வாகத்திலும் அரசியலமைப்புப் பதவிகளிலும் நிர்வாகத் திறனோடு செயல்பட்டவர் மறைந்த ஒடிசா முன்னாள் ஆளுநர் எம்.எம்.ராஜேந்திரன் என்று அவரது மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும், ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம்.ராஜேந்திரன் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:



தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளரும் ஒடிசா மாநில முன்னாள் ஆளுநருமான எம்.எம்.ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்தினார் என்று அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

1957 பேட்ச் ஐ.ஏ.எஸ். அதிகாரியான ராஜேந்திரன் அவர்கள் உதவி ஆட்சியர், துணை ஆட்சியர் போன்ற பொறுப்புகளை வகித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியராக உயர்ந்தவர். அந்தச் சமயத்தில் 1964-ஆம் ஆண்டு தனுஷ்கோடியில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தை எதிர்கொண்டவர். அந்த அனுபவத்தைக் கொண்டு பின்னாளில் 1999-ஆம் ஆண்டு ஒடிசா மாநில ஆளுநராக இருந்த போது அங்கு நிகழ்ந்த புயலை எதிர்கொள்வதிலும் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி முக்கியப் பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தபோது தலைமைச் செயலாளரான ராஜேந்திரன் அவர்கள் 1989-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரான பின்னும் அப்பதவியில் தொடர்ந்து நீடித்துப் பணியாற்றினார்.

அரசு நிர்வாகத்திலும், அரசியலமைப்புப் பதவிகளிலும் சிறப்பாகவும் நிர்வாகத் திறனோடும் ஆக்கப்பூர்வமாகவும் செயல்பட்டவர் ராஜேந்திரன் அவர்கள். அவரை இழந்து தவிக்கும் அவரது துணைவியாருக்கும், உறவினர்களுக்கும், அவருடன் பணியாற்றிய இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால்

# கல்லூரிச் சான்றிதழ்களை இழந்த மாணவ - மாணவிகளுக்கு கட்டணமின்றி நகல்கள்!

## உயர் கல்வித் துறை இணைய தளம் உருவாக்கம்!

*சென்னை, டிச. 25 -*

“கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால் கல்லூரிச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகளுக்கு கட்டணமின்றி அவற்றின் நகல்களை பெறுவதற்கு இணைய தளம் உயர் கல்வித் துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது, தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளில் வரலாறு காணாத மழைப்பொழிவு ஏற்பட்டு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், “மிக்ஜாம்” புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்பினால் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகச் சான்றிதழ்களை இழந்த மாணவ / மாணவிகள் தங்கள் சான்றிதழ்களின் நகல்களை கட்டணமின்றி பெறுவதற்கு ஏதுவாக www.mycertificates.in என்ற இணையதளம் உயர்கல்வி துறையால் உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மாணவ / மாணவியர்களும் தாங்கள் இழந்த சான்றிதழ்களின் நகல்களை பெற அச்சான்றிதழ்கள் பற்றிய விவரங்களை மேற்கண்ட இணையதளம் வாயிலாக பதிவு செய்து கொள்ளலாம்.

மாணவ / மாணவிகள் மேற்கண்ட இணையதளம் வாயிலாக சான்றிதழ்களின் விபரங்களை பதிவு செய்தபின் அவர்களது மின்னஞ்சலுக்கு ஒப்புகை (Acknowledgement) அனுப்பப்படும்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்பட்டு, மாணவ / மாணவியர்களுக்கு, அவர்கள், எந்த மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தார்களோ, அதே மாவட்டத்திலேயே, அவர்களுக்கு வழங்கப்படும். அதாவது, திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு திருநெல்வேலி மாவட்டத்திலேயே வழங்கப்படும்.

மேலும், இணையதளத்தில் பதிவு செய்வது குறித்த சந்தேகங்களுக்கு தெளிவு பெற, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் செயல்படும் கட்டணமில்லா அழைப்பு மையத்தை 18004250110 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு உயர் கல்வித் துறை அறிவித்துள்ளது.

### ஈரோடு வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர்

# திருமதி ஏ.சி.குப்புலட்சுமி மறைவு!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 25-

ஈரோடு வடக்கு மாவட்டக் கழக மகளிர் தொண்டர் அணித் தலைவர் திருமதி ஏ.சி. குப்புலட்சுமி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கல் செய்தியில்,

“ஈரோடு வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் திருமதி ஏ.சி.குப்புலட்சுமி அவர்கள் 23.12.2023 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்”

- என்று குறிப்பிட்டுள்ளார்.



தேனி வடக்கு மாவட்டம், போடி சட்டமன்ற தொகுதி வீரபாண்டி தனியார் மண்டபத்தில் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன், தலைமையில் தேனி பாராளுமன்ற தேர்தல் பணி குறித்து பாக முகவர்கள் பில்.ஏ.2 மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனகூட்டம் நடைபெற்றது. உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ. தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் வி.செயின், மாவட்ட அவை தலைவர் பி.டி.செல்ல பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் திருக்கண்ணன், தேனி தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்ன சபாபதி, தேனி வடக்கு ஒன்றியச் செயலாளர் தேனி ஊராட்சி ஒன்றிய தலைவர் சக்கரவர்த்தி, ஒன்றிய செயலாளர் அயப்பன், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான், வீரபாண்டி பேரூர் செயலாளர் செல்வராஜ் மற்றும் மாவட்ட நகர, ஒன்றியக் கழக, பேரூர் வார்டு பகுதி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான

# புலம்பெயர்வோர் மசோதாவை ஒன்றிய அரசு சட்டமாக்கிட வேண்டும்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் வலியுறுத்தல்!

*சென்னை, டிச. 25-*

“வெளிநாடு செல்லும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான புலம்பெயர்வோர் மசோதாவை ஒன்றிய அரசு சட்டமாக்கிட வேண்டும்” என்று தமிழ்நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து நடைபெற்ற கருத்தரங்கில் பொன்.குமார் பேசியதாவது:-

கட்டுமானத் தொழிலாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் போன்ற அமைப்புசாராத் தொழிலாளர்கள் தரமான வேலை, நல்ல சம்பளம் என்ற நம்பிக்கையோடு வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர். ஆனால், அந்த நாடுகளுக்குச் சென்ற பிறகு பல்வேறு இன்னல்களுக்கு இந்தத் தொழிலாளர்கள் ஆளாகின்றனர். குறிப்பாக, முகவர்கள் மற்றும் துணை முகவர்களால் போலியான வாக்குறுதி வழங்கப்பட்டு, அதிக அளவில் பணம் பெற்றுக் கொண்டு டூரிஸ்ட் விசாவில் வெளிநாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பி வைக்கின்றனர். அந்த நாடுகளுக்குச் சென்ற பின் சொல்லப்பட்ட வேலையோ, உறுதியளிக்கப்பட்ட சம்பளமோ அவர்களுக்கு கிடைப்பதில்லை. பல தொழிலாளர்கள் ஒட்டகம் மேய்க்க நிர்ப்பந்தப் படுத்தப்படுகின்றனர். குறைந்த சம்பளத்திற்கு நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் வெளிநாடுகளுக்குச் சென்ற தொழிலாளர்களின் பாஸ்போர்ட்கள் அந்த நாட்டு முதலாளிகளால் பறிமுதல் செய்து கொள்ளப்படுகிறது. இதனால் விரும்பிய நேரத்தில் தாயகம் திரும்ப முடியாத பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். இறந்து போனத் தொழிலாளர்களை தமிழ்நாட்டுக்கு கொண்டு வர முடியாத நிலை, செய்த வேலைக்கு உரிய சம்பளம் கிடைக்காத சூழல் இப்படி பல்வேறு பிரச்சினைகளை அந்நிய நாடுகளில் தொழிலாளர்கள் சந்திக்கின்றனர்.

இப்படிப்பட்ட புலம்பெயர்ந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக



2010 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி காலத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த சட்டத்தின் மூலம் வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டது. ஆனால் ஆட்சி மாற்றத்திற்கு பின், பத்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் அந்த சட்டமும், வாரியமும் முறையாக செயல்படாமல் முடக்கி வைக்கப்பட்டது. தற்போது தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பின் இந்த வெளிநாட்டில் உள்ள வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக தலைவர் கலைஞரால் கொண்டுவரப்பட்ட அந்த சட்டத்தை கொண்டு நலவாரியம் அமைத்து அதற்கு திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

அதுபோல இந்த துறைக்காகவே ஒரு அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு அதற்கு கே.எஸ்.மஸ்தான் அவர்களை அமைச்சராக நியமனம் செய்து இதை கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

ஆனால் மத்தியில் உள்ள மோடி அரசு இந்த தொழிலாளர்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. புலம்பெயரும் தொழிலாளர்களுக்கான 1993 ஆம் ஆண்டு சட்டத்தை உரிய திருத்தங்களுடன் தேவையான பாதுகாப்பு அம்சங்களுடன் அந்த மசோதா பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால், இது வரை அந்த மசோதாவை சட்டமாக்கப்படவில்லை.

இவ்வாறு பொன்.குமார் பேசினார்.

இந்த செயலை கண்டித்தும் விரைந்து இந்த மசோதாவை சட்டமாக்கிட நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியும் கருத்தரங்கு சென்னையில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் நடைபெற்றது.

சென்னை, தியாகராய நகர், சர்பிட்டி தியாகராய அரங்கத்தில் இந்த புலம் பெயரும் தொழிலாளர்களுக்கான பிரச்சினைகள் குறித்த கருத்து அரங்கம் விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி பொதுச்செயலாளர் என்.சுந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. இளைஞரணித் தலைவர் வினோத்பொன்குமார், பொதுச்செயலாளர்கள் ஜெகமுருகன், வி.சுப்பராயலு, மாநிலப் பொருளாளர் ஆர். சேகர் ஆகியோர் முன்னிலையில் பொதுச்செயலாளர் பொறி.எஸ்.ஜெகதீசன் வரவேற்று பேசினார்.

இந்த கருத்தரங்கில் கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார் தொடக்க உரையாற்றினார். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சி.பி.எம். செயலாளர் மு. பாலகிருஷ்ணன். சி.பி.ஐ. இணைப் பொதுச் செயலாளர் வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் எஸ். எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுச்செயலாளர் முகமது அபுபக்கர், இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அகமது, மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.கணபதி, விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா ஆகியோர் உரையாற்றினர்.

அருணோதய புலம்பெயர்வோர் அமைப்பின் இயக்குனர் டாக்டர் பொர்ணாடி.சாமி, தேசிய வீட்டு பணியாளர் சங்க ஒருங்கிணைப்பாளர் எம்.வளர்மதி, Geneva Global அமைப்பின் பொறுப்பாளர் பி. பாலமுருகன், தொழிற்சங்க கூட்டமைப்பு பொதுச்செயலாளர் குருநாகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. காசிநாதன்

### டிசம்பர் 25 (1991)



தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை இளமைக் காலம் முதல் தனது இறுதிக் காலம் வரை கடைபிடித்து வந்தவர்.

கழகம் துவங்கிய காலத்திலேயே கொடுங்கையூர் பகுதியில் கழகம் வளர்க்கப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

கிளைச் செயலாளராகவும், புழல் ஒன்றிய அவைத் தலைவராகவும், பின்னர் கொடுங்கையூர் சென்னை மாநகராட்சிக்குள் இணைந்த போது பெரம்பூர் 1வது வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கோரம்பள்ளம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டனர். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கதன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.




மிக்ஜாம் கன மழை வெள்ள நேரத்திலும் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றிய பத்திரிகையாளர்கள் 400 பேருக்கு சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் அரிசி, மளிகைப் பொருட்கள் ஆகியவற்றை மழைக்கால நிவாரணமாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியாராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் பிராட்வே டான் போஸ்கோ பள்ளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று 2200 பேருக்கு புத்தாடை, அரிசி, மளிகைப் பொருட்கள் கிறிஸ்துமஸ் கேக் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாராஜன் மற்றும் பலர் உள்ளனர்.



# திராவிட மாடல் அரசு 48

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**







## இதோ மக்களைத் தேடிச் செல்கிறது, கோட்டை!

ஆட்சிக்கு வர வேண்டும் என்று நினைக்கும் ஒவ்வொரு கட்சியும், ‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இந்தந்த நலத்திட்டங்களைச் செய்வோம்’ என்று வாக்குறுதிகளை தந்து தேர்தலில் வாக்கு சேகரிக்கும்.

2021 சட்டமன்றத் தேர்தலில் ஒரு புதுமை நடந்தது. நம் திராவிட முன்னேற்றக் கழகம், கொடுத்த வாக்குறுதிகளை அடுத்தடுத்து நிறைவேற்றி வருகிறது. அந்த வாக்குறுதிகளுக்கு எல்லாம் மகுடம் வைத்தாற்போல் இருந்தது, நம் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ எனும் சபதம்.

பிரச்சாரக் களத்திலேயே சுமார் 4 இலட்சம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார் நம் கழகத் தலைவர். 2021 மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ‘முதல்வரின் முகவரி’ எனத் தனிப் பிரிவை உருவாக்கி, அதன் மூலம் பிரச்சாரத்தின் போது பெற்ற மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தர விட்டார். அந்த மனுக்களில் சுமார் 90 சதவிகிதம் அளவுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய மனுக்கள் மீதும் தீர்வு நடவடிக்கைகள், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு, பொறுப்பேற்ற 100 நாட்களில் மக்கள் மனம் குளிர, அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட்டன.

**‘மக்களிடம் செல், மக்களுடன் இணைந்து பணியாற்று’** என்ற பேரறிஞர் அண்ணா வகுத்துக் கொடுத்த பாதையில் நடைபோடும் நம் கழகத் தலைவர் அவர்கள், அண்ணாவின் வாக்கை நிறைவேற்றும் விதமாக, ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ எனும் திட்டத்தின் மூலம், தானே நேரடியாக களத்துக்குச் சென்று, மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகிறார்.

**முதலமைச்சரின் அந்த முன்னெடுப்பில், மற்றும் ஒரு புதிய பாய்ச்சல்தான் ‘மக்களுடன் முதல்வர்’. ஆம்... முதலில் மக்கள், முதல்வரைத் தேடி வந்தார்கள். பிறகு, முதல்வர் மக்களைத் தேடிச் சென்றார். இப்போது, தான் மட்டுமல்லாது, தன்னுடன் அரசாங்கத்தையும் கைப்பிடித்து அழைத்துச் சென்று மக்கள் முன் நிறுத்துகிறார்.** அதாவது, இப்போது செயின்ட் ஜார்ஜ் கோட்டையே மக்களைத் தேடிச் சென்று சேவைகளை வழங்க உள்ளது.

### உரிய நேரத்தில், விரைவு சேவை

‘அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் பொதுமக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது ஒவ்வொரு துறையின் பொறுப்பு’ என்பது **‘கள ஆய்வில் முதலமைச்சர்’** திட்டத்தின் இலக்கு என்றால், அந்த சேவைகளைச் செழுமைப்படுத்தியும், எளிதாக மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பது **‘மக்களுடன் முதல்வர்’** திட்டத்தின் இலக்கு.

இந்தத் திட்டத்தின் கீழ், அரசிடம் தினமும் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகள், சேவைகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை நிறைவேற்றி வைக்க இருக்கிறது நம் ‘திராவிட மாடல் அரசு’.

முதற்கட்டமாக, இந்தத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் செயல்படுத்தப்பட உள்ளன. இரண்டாவது கட்டமாக, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளான வார்டு, கிராம ஊராட்சி அளவில் செயல்படுத்தப்பட உள்ளன.

### மாவட்டந்தோறும்... முப்பது நாட்களில்...

கடந்த டிசம்பர் 18 அன்று, கோயம்புத்தூர் மாவட்டத்தில் முதலமைச்சரால் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மழையால் பாதிப்படைந்த சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட 8 மாவட்டங்கள் தவிர, இதர 30 மாவட்டங்களில் இந்தத் திட்டம் தொடர்பாக முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வரும் 2024 ஜனவரி முதல், மீதமுள்ள அந்த மாவட்டங்களில் முகாம்கள் நடத்தப்படும்.

இந்த 30 மாவட்டங்களில் 1,745 முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்படும். ஒரு மாவட்டத்துக்கு 10 முகாம்கள் வீதம் நடைபெற உள்ளன.

ஒரு சேவையைப் பெறுவதற்கு அவ்வப்போது அரசு அலுவலகங்களுக்குச் சென்று வருவதால், மக்களுக்குக் கால விரயம், அலைச்சல், மனச்சோர்வு உண்டாகிறது. இவற்றைத் தவிர்க்கவே, மக்களின் வீடுகளுக்கு அருகிலேயே முகாம் அமைத்து, அங்கேயே ஒரு சேவையை வழங்குவதற்குத் தேவைப்படும் அனைத்து ஆவணங்களையும் பெற்று, தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால், எளிய மக்களும், அரசின் சேவைகளை எளிதாக, விரைவாகப் பெற முடியும்.

எவ்வளவு பெரிய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பதில் இல்லை, வெற்றி... அவற்றை எந்த அளவுக்குப் பொதுமக்கள் எளிமையாக, விரைவாக அணுகும்விதத்தில் செயல்படுத்துகிறோம் என்பதில் உள்ளது உண்மையான அக்கறை. அந்த அக்கறைக்கு இன்னொரு பெயர்... ‘திராவிட மாடல் அரசு!’

**...சாதனை தொடரும்**

### என்ன துறைகள்... என்ன சேவைகள்...

‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் கீழ், பின்வரும் 13 அரசுத் துறைகளில், கீழ்க்கண்ட சேவைகள் வழங்கப்பட உள்ளன.

**1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை.**

பட்டா மாற்றுதல், சர்வே விண்ணப்பங்கள், ஆன்லைன் பட்டா, ஆன்லைனில் பெயர் மாற்றுதல், வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஓய்வூதியம்.

**2) ஊரக வளர்ச்சித்துறை.**

வீட்டு வரி, குடிநீர்க் குழாய் இணைப்பு, வீடு கட்டுமானத் திட்ட அனுமதி, மகளிர் மேம்பாட்டுக் கழகக் கடன்கள்.

**3) நகராட்சி நிர்வாகத்துறை.**

குடிநீர் மற்றும் சாக்கடை இணைப்புகள், பிரதம மந்திரி சிறு வணிகக் கடன், தெருவோர வியாபாரிகள் அடையாள அட்டை, புறம்போக்கு நில வரி, சொத்து வரி, தொழில் உரிமங்கள், கட்டுமான திட்ட அனுமதி, பிறப்பு, இறப்புச் சான்றிதழ், திடக் கழிவு மேலாண்மை.

**4) ஆதி திராவிடர் நலத்துறை.**

கல்வி உதவித் தொகை, வீடு கட்ட இடம், ஆன்லைன் பட்டா, தாட்கோ வங்கிக் கடன்.

**5) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை.**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகக் கடன்கள் (டாம்கோ),

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகக் கடன்கள் (டாப்செட்கோ), கல்வி உதவித் தொகை.

**6) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.**

திட்ட அனுமதி, நில வகைப்பாடு மாற்றம், தமிழ்நாடு நகர்ப்புற வீட்டு வளர்ச்சி வாரிய குடியிருப்புகள், குடியிருப்பு உரிமையாளர் ஆவணம்.

**7) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை.**

பல்வேறு தொழிலாளர் நலன் வாரியங்களில் வழங்கப்படும் சேவைகள்.

**8) கூட்டுறவுத் துறை.**

கூட்டுறவு சொசைட்டி கடன்கள்.

**9) சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் துறை.**

புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்), பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்த மானியத் திட்டம் மற்றும் மாவட்ட தொழில் மையக் கடன்கள்.

**10) மாற்றுத்திறனாளிகள் நலத்துறை.**

மாற்றுத்திறனாளி அடையாள அட்டை, பராமரிப்பு உதவித் தொகை, கருவிகள், சுயதொழில் உள்ளிட்ட கடன்கள்.

**11) சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை.**

புதுமைப் பெண் திட்டம், ஆதரவற்றோருக்கு உதவும் திட்டம், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்.

**12) எரிசக்தித் துறை.**

புதிய மின் இணைப்புகள், கட்டண மாற்றங்கள், பெயர் மாற்றம்.

**13) காவல்துறை.**

பொருளாதாரக் குற்றம், நில அபகரிப்பு, ஏமாற்றுதல், சிறார் வன்கொடுமை மற்றும் இதர புகார்கள்.

### மகளிர் நலனில் மக்கள் அரசுகள்...

மக்கள் நல அரசுகள் என்ன செய்யும் என்பதற்கு தமிழ்நாட்டின் **‘தோழி’ விடுதி** என்கிற முன்னெடுப்பு போல, கேரளாவிலும் எடுக்கப்பட்ட முயற்சி பெரிய வெற்றி பெற்றுள்ளது.

கேரள மாநிலத்தின் கொச்சி மாநகராட்சி சார்பில், பெண்களுக்காக, பெண்களால் நடத்தப்படும் ‘ஷீ’ விடுதி (SHE LODGE) கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த முயற்சி பணி புரியும் பெண்கள் மத்தியில் வெற்றி பெற்றுள்ளது. இந்த விடுதி தொடங்கப்பட்ட 9 மாதங்களில் இதுவரை 22,500 பேர் தங்கிச் சென்றுள்ளனர்.

ஒரு நாள் இரவு தங்குவதற்கு ரூ.100 மட்டுமே வாடகை. ஒரே நேரத்தில் 160 பேர் வரை தங்கலாம். கண்காணிப்பு கேமரா, இணைய வசதி உள்பட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ள இந்த விடுதியில், பத்து ரூபாய்க்கு உணவும் வழங்கப்படுகிறது. இந்த விடுதியினையும் உணவகத்தையும் கேரள அரசின் சமூக நலத்துறையான அமைப்பான குடும்பஸ்ரீ நடத்துகிறது.

12 வயதுட்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை என்பதால், கொச்சி வரும் பெண்களுக்கு மிகவும் குறைந்த விலையில், பாதுகாப்பான தங்குமிடமாக ’ஷீ’ விடுதி வெற்றி பெற்றுள்ளது. பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, சுதந்திரச் சிந்தனைகளைப் பேணுவதில் அரசுகள் காட்டும் அக்கறையே சமூக மாற்றத்தின் வித்தாக இருக்கிறது. கேரள மாநகராட்சியின் இந்த முயற்சி திராவிட மாடல் அரசின் நீட்சியன்றி வேறென்ன?

### :ப்ளாஷ்பேக்




**பவள விழா படத்திறப்பு!**

1991 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21, 22 தேதிகளில் மதுரையில் திராவிட இயக்கப் பவள விழா நடைபெற்றது. நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் என இயக்க முன்னோடிகளை நினைவு கூறும் வகையில், பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. கழக இளைஞர் அணி சார்பாக அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநாட்டின் முதல் நிகழ்வாக கழகப் போராட்டங்களில் பங்கேற்ற தியாகிகளின் படத்தினை திறந்து வைத்தார். அப்போது அவருடன் நானும் இடம்பெற்ற நிகழ்வு இன்றைக்கு நினைத்தாலும் பெருமையாக இருக்கிறது.



மேகநாதன்

**-இல.மேகநாதன்,**
**தலைமைச் செயற்குழு உறுப்பினர்,**
**திருக்குவளை, நாகப்பட்டினம் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**எம்.ஜி.ஆரை மீட்ட கலைஞர்!**

**1989 ஆம் ஆண்டுக் கழக ஆட்சியின்போது, சென்னை தரமணியில் திரைப்பட நகரம் அமைக்க அடிக்கல் நாட்டினார் கலைஞர். அப்போது ஒன்றிய அமைச்சராக இருந்த உபேந்திராவை அழைத்துவந்து அடிக்கல் நாட்டப்பட்டது. அடுத்து ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, அந்தத் திரைப்பட நகருக்கு தனது பெயரைச் சூட்டிக் கொண்டு, திறந்து வைத்தார். கலைஞர் மீண்டும் 1996 ஆட்சியில் அமர்ந்தபோது திரைத்துறையினரின் கோரிக்கையை ஏற்றுத் தரமணி திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர் பெயரைச் சூட்டினார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 339




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.